Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
• INDEPENDENTLY OWNED AND OPERATED
HOMELIFE HIGHER STANDARDS
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666

17 வது வருடத்தில்
விளம்பரம் ™
VLAMBARAM ™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

நதி 17 | பாலம் 04 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | FEBRUARY 15, 2007



## ஈழ கிராமத்தின் கதை - மண்

19




## பெப்ரவரி 14 காதலர் தினம்

# சிறிலங்காவில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது

## கொலை மிரட்டல்களின் பின்னால் காவல் துறை

“சிறிலங்கா பொலிஸார் மக்களை பாதுகாக்கும் திறமையற்றவர்கள். பொதுமக்களுக்கு விடுக்கப்படும் கொலை அச்சுறுத்தல்கள் பொலிஸாரின் பங்களிப்புடனேயே விடுக்கப்படுகின்றன. சிறிலங்காவில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது, குறிப்பாக சிறிலங்கா பொலிஸ் மக்களை பாதுகாக்கும் திறனை இழந்துவிட்டது” என ஆசிய மனித உரிமை ஆணைக்குழு தனது அறிக்கையில் சிறி லங்கா அரசை மிகக் கடுமையாக குற்றம் சாட்டியுள்ளது.

வழமையாக கொலை அச்சுறுத்தல்கள் சிறிலங்கா பொலிஸாரின் பங்களிப்புடனே விடுக்கப்படுவதாகவும் நம்பப்படுகின்றது. இருந்த போதும் மக்கள் கொலை அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் போது சிறி-லங்கா பொலிஸாரினர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை என்பதுடன் அச்சுறுத்தலுக்கு உள்ளான மக்களுக்கு பாதுகாப்பும் வழங்குவதில்லை. சாட்சியங்களை பாதுகாக்கும் சட்டங்கள் இல்லாததால் கொலை அச்சுறுத்தல் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுப்பது என பொலிஸாருக்கு எதுவும் தெரிவதில்லை. இது தொடர்பாக பொலிஸ் பிரிவினருக்கு எந்த வழிகாட்டல்களும் இல்லை.

அனுராவின் கொலை அச்சுறுத்தல் தொடர்பாக கருத்து தெரிவித்த மற்றுமொரு அமைச்சர் கூறுகையில், அரசியலில் எல்லா நேரமும் எமக்கு மரண அச்சுறுத்தல் உள்ளது. மரணத்துடன் வாழ்வதே அரச-ியல் என தெரிவித்துள்ளார். இந்த அறிக்கையின்படி சிறி லங்காவில் கொலை அச்சுறுத்தல்களை விடுப்பது சாதாரண வாழ்க்கையில் ஒரு பகுதியாக மாறிவிட்டது. அதாவது சிறிலங்காவில் வாழ்க்கை நடத்துவது மிகவும் பாதுகாப்பற்றதாக மாறியுள்ளது. இந்த கொலை அச்சுறுத்தல்கள் அரசி யல்வாதிகள், வேறுபட்ட எதிர்க்கட்சிகள், ஊடகவியலாளர்கள், வர்த்தகர்கள் ஆகியோருக்கு அரசின் ஆயுதம் தாங்கிய குழுக்களால் விடுக்கப்படுகின்றன. இவை தவிர சாதாரண மக்களும் எதிர்த்தரப்புக்களின் பிரதேசங்களில் வாழும் போதும், வழக்குகளில் சாட்சியம் அளிப்பவர்கள், மனித உரிமை மையங்களில் முறைப்பாடுகள் செய்பவர்கள், உயர் பதவிகள் வகிப்போர் ஆகியோரும் இந்த அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றனர். கொலை அச்சுறுத்தலானது விடுக்கப்படுபவர்களுக்கும், அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கும் கடும் அச்சத்தையும் மன அழுத்தத்தையும் தோற்றுவிக்கின்றது.

கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுவது மனிதர்களின் சுதந்திரம், பாதுகாப்பு என்பவற்றை கடுமையாக மீறும் செயலாகவே எடுக்கப்பட வேண்டும். எனவே சட்டப்படி நேர்மையான விசாரணைகளை நடத்தி அவர்களை தண்டிக்க வேண்டும் சிறிலங்காவில் கொலை அச்சுறுத்தல் ஒரு பொதுவான கலாசாரமாக மாறியுள்ளது.

ஆசிய மனித உரிமை ஆணைக்குழுவின் பார்வையில் ‘சிறிலங்காவில் மலிந்து போயுள்ள கொலை அச்சுறுத்தல்கள் நாட்டின் பாதுகாப்பு அற்ற தன்மையை காட்டுகின்றது. எனவே அரசு இதனை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். கொலை அச்சுறுத்தல்களை நிறுத்துவதற்கு சட்டப்படி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மேலும் மனித உரிமை சபை, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம், ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்கள், அனைத்துலக சமூகம் என்பன இது தொடர்பாக சிறிலங்கா அரசுடன் கலந்துரையாடி இந்த கொலை அச்சுறுத்தல்களை ஒரு முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்’. இவ்வாறு ஆசிய மனித உரிமை ஆணைக்குழு தனது அறிக்கையில் கேட்டுக் கொள்கின்றது என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதேசமயம் “கடந்த இருபது வருடகால யுத்தத்தால் தமிழ் மக்களின் வாழ்க்கையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அதேவேளை, அந்த யுத்தத்தில் அரசினால் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கவும் முடியவில்லை” என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் அலுவலர் செல்வி கெலானோ ரத்தோ ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறான கருத்தை தெரிவித்துள்ளார். அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மோதல்களைத் தவிர்த்தால் மட்டுமே, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான அடித்தளத்தை அமைக்கமுடியும் என்றும் மேலும் இவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் 22ஆம் திகதி போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி 5 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இந்த நிலையில், போர்நிறுத்த உடன்படிக்கையை முறிப்பதாக ஒரு தரப்போ அல்லது இரு தரப்போ அறிவிக்கும்வரை யுத்தநிறுத்த உடன்படிக்கை அமலிலேயே இருக்கும்.

அதே சமயம் ஊடகவிலாளர்கள் அவர்களின் தொழில்களை



மேற்கொள்ளும்போது ஏற்படும் பிரச்சினைகளையும் அச்சுறுத்தல்களையும் அமெரிக்கா கண்டிக்கிறது. இலங்கையின் ஊடக சுதந்திரம் குறித்து அமெரிக்கா கண்காணித்து வருகின்றது என்றும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

நிலைமைகள் இவ்வாறு இருக்க சமய சந்தர்ப்பம் தெரியாமல் ஐரோப்பி ஒன்றியம் மீது இலங்கை ஜனாதிபதி மகிந்த மாலைதீவில் வைத்து தாக்குதலைத் தொடுத்திருக்கின்றார். “ஐரோப்பிய ஒன்றியம், மனித உரிமை மீறலில் ஈடுபடுவதாக இலங்கை அரசையே குற்றம் சாட்டுகின்றது. ஆனால் விடுதலைப்புலிகளால் மீறப்படும் மனித உரிமை மீறல் தொடர்பாக அது கண்டுகொள்ளாமல் இருக்கின்றது” என கடும் தொனியில் மகிந்த கூறியுள்ளார்.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Bright Future of Your Child
உங்கள் குழந்தையின் சிறப்பான எதிர்காலம்
is determined by these equations.
Education = Intelligence + Characters
Performance = Knowledge x Believe x Action
பின்வரும் சமன்பாடுகளால் தீர்மானிக்கப்படுகிறது
கல்வி = அறிவுத்திறன் + பண்புகள்
நிறைவேற்றுத்திறன் = அறிவு x நம்பிக்கை x செயல்
Classes for Children 7 to 16 years old
KG Master
416.725.5112 or 416.763.0332
www.kgmaster.com
Also see Page 15

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC
(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM ™ Veedu Mortgages Inc.

Buy & Sell Residential and Commercial
Raj A. Rasaratnam B.Com.
Sales Representative
416-726-8055
வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க
HomeLife/GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently own and operated
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON M1S 3Y3

வாழ்வு-வியாபாரம்-முதலீடு
HomeLife GTA Realty Inc., Brokerage *
Shiva Sharmah
Sales Representative
416-666-5515
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd.
Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

# கடவுள் மனிதனுக்கு கொடுத்துள்ள வெகுமதி காதல்

'காட்சி, வேட்கை, ஒருதலை, உள்ளுதல்,
மெலிதல், ஆக்கம் செப்பல், நாணுவரையிறத்தல்
நோக்குவது எல்லாம் அவையே போறல்,
மறத்தல், மயக்கம், சாக்காடு என்று இச்
சிறப்புடைய மரபினை களவு என மொழிப'

காதல் தோன்றுவதற்கு பத்து செயல்கள் காரணமாகின்றன என்று, தொல்காப்பியர் மேலே உள்ள பாடலில் தெரிவித்துள்ளார். அவையாவன காட்சி என்பது ஒருவரை பார்க்க முற்படுவது. வேட்கை என்பது மீண்டும் மீண்டும் பார்க்க விருப்பப்படுவது. ஒருதலை உள்ளுதல் என்பது ஐயப்படுவது. அதாவது தான்மட்டும் நினைக்கிறோமோ? அவர் நினைக்கவில்லையா? பார்க்க விரும்பமில்லையா? என ஐயப்பட்டு தனக்குத்தானே பேசிக் கொள்ளுதல். மெலிதல் என்பது அவரையே நினைந்து சரியாக உண்ணாமல், உறங்காமல் உடலை கெடுத்துக் கொண்டு மெலிந்து போதல். ஆக்கம் செப்பல் என்பது தன் காதலை ஏதேனும் ஒருவழியில் அவருக்கு கூற முற்படுவது. நாணுவரையிறத்தல் என்பது அவர் சரியாகப் புரிந்து கொள்ளாவிட்டால் நாணத்தை மறந்து அவரிடமே சென்று தன் காதலை வெளிப்படையாகக் கூறுவது. நோக்குவது எல்லாம் அவையோ போறல் என்பது காதலை அவர் ஏற்றுக்கொண்டுவிட்டால் பார்க்கும் பொருளிலெல்லாம் அவரைக் காணுதல், கேட்கும் சொல் எல்லாம் அவராகவே நினைத்தல், அனைத்தும் அவராகவே எண்ணல். மறத்தல் என்பது இந்த உறவு நிலை உற்றாருக்கும் ஊராருக்கும் தெரிந்து விட்டபின்பு, திருமணத்திற்கு அவர் மறுத்து விட்டால் தன்னைத்தானே துன்புறுத்தி கொண்டு அவரை மறக்க முயலுதல். மயக்கம் என்பது அவரை மறக்க முடியாத நிலையில் தன்னை மறந்து கனவிலும் அவர் பெயரையே கூறிப் பிதற்றுவது. சாக்காடு என்பது திருமணத்திற்கு இசைவு கிடைக்காது என்று தெளிவாகத் தெரிந்த பின்னர் தன்னை அழித்துக் கொள்வது.



'ஒருத்தி ஒருவனை நினைந்துவிட்டால் அந்த உறவிற்குப் பெயர்தான் காதல்'. உள்ளங்கள் உறுதியாக ஒன்றிணைந்தால் காதல் உருப்பெறுகின்றது. உரம் பெறுகின்றது. நிலைக்கின்றது. நீடுவாழ்கின்றது. அந்த நிலையில் அவர்கள்
'இங்கு நீயொருபாதி, நானொரு பாதி
இதில் யார் பிரிந்தாலும் வேதனை பாதி'
என்று பாடுகின்றனர்.

காதல் யாரையும் விட்டு வைக்கவில்லை. ஆண்டி முதல் அரசன்வரை ஆட்டிப்படைத்தது காதல். அண்ணலும் நோக்க அவளும் நோக்க கண்கள் கலந்து காதல் வளர்ந்த கதையினை இலக்கியங்கள் இயம்புகின்றன. செம்புலப் புயல் நீராய் காதல் இருந்த கதை இலக்கியக் காட்சிகள் காட்டுகின்றன.

'காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் என்கின்றார் குயில் பாட்டில் பாரதியார். காதலர் சாகலாம். ஆனால் காதல் சாகக்கூடாது. அது சிரஞ்சீவியாய் வாழ வேண்டும். எங்கிருந்தாலும் அது வாழவேண்டும். இதய அமைதியைத் தரவேண்டும். இன்பம் பயக்க வேண்டும். எனவே தான்

**நா.க.சிவராமலிங்கம்**

'ஒரு பொழுதேனும் உன்னுடனே நான்
உயிராய் இணைந்திருப்பேன்
இறப்பினும் மறுபிறப்பினும் நான்
என்றும் நினைத்திருப்பேன்
இது உண்மை காதலின் வெளிப்பாடாக காதலன் பாடுவதாகும்.
இனியவளே என்னவளே
வானம் கூட நிலவைப் பார்க்காமல்
ஒருநாள் இருந்துவிடும்
ஆனால் உன்னை நான்
ஒருநாள் கூட ஒருநிமிடம் கூட
ஒருவிநாடி கூட பார்க்காமல்
இருக்க இயலாதது தவிக்கிறேன்
போகின்ற பாதையெல்லாம் உன் பூமுகம் காண்கின்றேன். இது காதல் பித்தேறிய நிலையில் காதலன் பாடும் பாட்டாகும்.

# அதிகாலை தியானம் ஆனந்தமான வாழ்விற்கு வழி

காலம் காலமாக காலை! அதிகாலை! பூமி விழிக்கின்ற போது மரங்கள் விழிக்கின்ற போது பறவைகள் விழிக்கின்ற போது சூரியன் விழிக்கின்ற போது முழுச் சூழலும் விழிப்பால் நிறைந்திருக்கும் போது இந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்தலாம்.

இந்த விழிப்பலைகளில் பயணம் செய்து எங்களுடைய ஆன்மாவிற்குள் நாம் செல்லலாம். விழிப்புடன் கவனமாக பிரங்ஞையுடன்...

நம் முழு வாழ்வும் மாறிவிடும். நம் முழுநாளும் மாறிவிடும். ஏனெனில் நமக்கு புதிய ஆரம்பம். இது தான் மிகப்பெரிய இரகசியம்.

எண்ணங்கள்! தூசிகள் போல. மனம் எனும் கண்ணாடியில் ஒட்டிக் கொண்டுள்ளன! எண்ணங்கள் ஆசைகள் கற்பனைகள் நினைவுகள்
எல்லாம் தூசிகளின் விதவிதமான வடிவங்கள். அதனால் தான் மனதின் தூய்மை காணாமல் போய்விட்டது.

கண்ணாடி நம் உடல் பிம்பத்தை பிரதிபலிப்பதைப்போல மனம் நம் ஆன்மாவின் பிம்பத்தை பிரதிபலிக்கும். ஆனால் தூசி கொண்ட மனம் நம்மைப் பிரதிபலிக்காது தன் தரத்தை இழந்துள்ளது.

தொடர்ச்சியாக மனதை சுத்தப்படுத்தல் தேவை. வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் நாங்கள் தூசிகளை சேர்த்துக் கொண்டிருக்கின்றோம். ஆகவே தியானம் என்பது ஒரு தரம் செய்தவுடன் மறந்துவிடும் விடயமல்ல. இது ஒரு பயணம் செய்யும் பயணியைப்போல. ஒவ்வொரு நாளும் தன் உடைகளில், தன் உடலில், தூசிகளை சேர்ப்பதும் இதனால் ஒவ்வொரு நாளும் தூசிகளை அகற்ற குளிப்பதைப் போல, மீண்டும் அடுத்த நாள் தூசிகளை சேர்ப்பது. பயணம் செய்யாது வீட்டிலிருக்கும் பொழுதுகூட தூசிகள் சேரும். வீட்டின் கண்ணாடிகளை கதவுகளை மூடினால் கூட தூசிகள் சேரும். தூசிகள் தானாக சேருபவை. நேரத்தைக் கடத்துவது தூசிகளை சேர்ப்பது போல.

அதிகாலை நேரம் தியானம் செய்வதற்கு சிறந்த நேரம். இரவு நேரம் முழுமையான நித்திரையில் ஓய்வாக இருந்து எழும்பொழுது,
நமது உயிர் மையப்பகுதிக்கு (Center of our being) அருகாமையில் நாம் இருப்போம். பிற நேரங்களை விட அதிகாலைநேரம்
நம் மையத்தை நோக்கி பிரங்ஞையாக (conscious) செல்வதற்கு இலகுவானது. ஏனெனில் இரவு நேரம் முழுவதும் நம் மையத்தில் இருந்துவிட்டு, கண் விழிக்கும் பொழுதுதான் அதைவிட்டு சிறிது விலகி வந்திருப்போம்.

வெளி உலகின் அதிகமான விடயங்கள் எழும்பியிருக்காத, விழித்திருக்காத நேரம் இது. வெளி உலகை நோக்கிய, உலக பொருட்களை நோக்கிய பயணத்தை அப்பொழுதுதான் ஆரம்பித்திருப்போம். ஆனால் உள்மையம் மிக அருகாமையில் அப்பொழுதும் இருக்கும். நம் கவனத்தை சற்று உள்நோக்கி மட்டுமே திருப்பவேண்டும். நம்மை அறிவதற்கு....
உண்மையை அறிவதற்கு...
நம் ஆன்மாவை அறிவதற்கு...

அதாவது ஆழ்ந்த நித்திரையின் பொழுது பிரங்ஞையின்றி (unconscious) எங்கு சென்றோம் என்பதை அறியலாம். ஆழ்ந்த நித்திரையின் பொழுது பிரங்ஞையில்லாமல் நம் மையத்திற்கு செல்கின்றோம்.

அங்கு இருப்பதனால்தான் நாம் இளமையாக துடிப்பாக மாறி புதிய சக்தியுடன் மீண்டும் காலையில் துயில் எழுகின்றோம். வெளி உலக வாழ்க்கையின் அலுப்புகள் அனைத்தும் எங்களிலிருந்து சென்றுவிடுகின்றன. மனக் காயங்கள் மாறுகின்றன. நம்மைச் சுற்றி இருந்த சகல குப்பைகளும் தூசுகளும் மறைந்து விடுகின்றன. ஏனெனில் நாம் எங்கள் உயிர்மையத்தில் கலந்து மூழ்கி எழுந்திருந்திருப்போம்.

அதிகாலை எழுந்திருக்கும் நாம், நம் மையத்திற்கு அருகிலிருக்கும் நாம், மிக விரைவில் வெளி உலகிற்குள் இழுபடப்போகின்றோம். அது நம்மை முழுமையாக ஆட்கொள்ளப்போகிறது. வெளி உலகிற்குப் போவதற்கு முன்பு சற்றுப் பிரங்ஞையுடன் உள்நோக்கி பார்த்தால் நம்மை அறியமுடியும். இதுதான் தியானம்.

தியானம் ஒவ்வொரு நாளும் குளிப்பதைப் போன்றது. ஒரு தரத்துடன் முடிந்துவிடும் விடயமல்ல. இது நமக்கு இயல்பாக இயற்கையாக வரவேண்டும்

உண்மை என்னவெனில் உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதும் குளிக்கும் பொழுதும் ஏன் நம் ஒவ்வொரு செயற்பாடுகளிலும்
வாழ்க்கையில் பிரிக்கப்பட முடியாத பகுதியாக இயற்கையானதாக மூச்சைப்போல தியானம் மாறவேண்டும்.

ஒரு நாளை ஆரம்பிக்கும் பொழுது மனதை சுத்தமாக வைத்திருப்பது ஒரு வெளிச்சத்தை தரும். புதிய பரிமாணத்தை தரும். ஆக நாம் தவறு விடமாட்டோம். பயங்கரமான மோசமான எண்ணங்கள் இருக்காது. தன்முனைப்பான எண்ணங்கள் இருக்காது. நாம் சுத்தமான பாதையில் உலகத்திற்குச் செல்லலாம்.

சரியான முறையில் தியானம் செய்தால் நாம் சக்தியின் அமைதித் தாடகமாக வந்துவிடுவோம். நாம் உலகத்தில்முற்றிலும் வித்தியாசமான முறையில் செயற்படுவோம். முரண்பாடுகள் இல்லாது ஆக்கிரமிப்பு குணமில்லாது ஆனந்தமாக செயற்படுவோம். யார் வெறுத்தாலும் அந்த சக்தியை அன்பாக மாற்றுவோம். உலகத்தினுள் திறமையாக செயற்படுவோம். எது நடந்தாலும் ஏற்றுக்கொள்வோம். பெற்றுக்கொள்வோம். ஆழமான அன்புடனும் நன்றியுணர்வுடனும்.

ஒருவர் நம்மை இழிவுபடுத்தினால் கூட அன்புடன் ஏற்றுக் கொள்வோம். இதனால் இழிவு தொடர்ந்தும் இழிவாக இருக்காது. இதானல் நாம் ஆனந்த மயப்படுவோம்.

இவ்வாறு இயற்கையாகவே ஒவ்வொரு கணமும் வாழ்வு மாறுமாயின் மனம் பிரகாசமாக ஒளிரும். புதிய வெளிச்சத்தை நோக்கி நாம் வளர்வதை உணரலாம். நம் முன் புதிய பாதை....

ஓசோவின் சொற்பொழிவிலிருந்து தழுவி எழுதப்பட்டது. Osho active meditation தொடர்பாக மேலும் அறிவதற்கு
Meerabharathy - 905 294 6707
647 505 6746

விளம்பரம்
VLAMBARAM
விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.
பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ்.
விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

HOME INSPECTION
• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...
ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# சிக்குன்கூனியா - CHIKUNGUNYA

இந்தப் பெயர் அண்மைக் காலங்களில் எமது தாயகத்தில் பரவலாகப் பேசப்பட்டதொன்றாக இருந்தது. பலர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டார்கள். சில முதியவர்கள் இந்த நோயினால் உயிரை இழந்தும் இருக்கின்றார்கள். இந்தப் பெயரை மேலோட்டமாக பார்க்கும்போது, இதில் இருக்கும் முதல் சில எழுத்துக்களைப் பார்த்து விட்டு, அதில் CHIKUN என்றதைப் பார்த்துவிட்டு இது ஏதோ கோழி சம்பந்தப்பட்ட வியாதி என்று நினைத்தவர்களும் உண்டு. ஆனால் இது CHICKEN அல்ல CHIKUN ஆகும். இந்த வியாதி முதலில் ஆபிரிக்காவில் உள்ள Tanganyika வுக்கும், Mozambique க்கும் இடையில் உள்ள Makonde பீட பூமியில் தோன்றியதாக கருதப்படுகின்றது. இந்த வியாதியினால் மூட்டுக்கள் பாதிக்கப்படுவதினால், நோயாளிகள் வளைந்து கூனிக்கொண்டு நடப்பார்கள். Makonde மொழியில் கூனி நடப்பது சிக்குன்கூனியா எனப்படுவதால், இந்த நோயினையும் இந்தப் பெயர் கொண்டு அழைக்கத் தொடங்கினார்கள்.

இந்த நோய்க்குரிய அறிகுறிகளை ஒத்ததான நோய் ஒன்று 1824 இல் இந்தியாவில் தோன்றியதாக பதிவுகள் உள்ளன. ஆனால் முதன் முதலில் இதற்குரிய வைரசு 1952-1953 களில் மனிதரில் இருந்தும், நுளம்புகளிலும் இருந்தும் பிரித்தெடுக்கப்பட்டது. இது அப்போது தான்சானியாவில் டெங்குக் காய்ச்சல் போலவே இருந்ததால் இந்த நோய் தோன்றியபோது அவ்வைரசு வேறெனப் பிரித்தறியப்பட்டது.

ஆசியாவில் முதன் முதலில் 1960 க்கும் 1982 க்கும் இடையில் இந்த நோய் தோன்றியது. பாங்கொக்கில் 1960 இலும், 1964 ஆம் ஆண்டு இந்தியாவில் வேலூர், கல்கத்தா, மகராஸ்திரா ஆகிய இடங்களிலும், 1969 இல் இலங்கையிலும், 1975 இல் வியட்நாமிலும், 1975 இல் மயன்மாரிலும் 1982 இல் இந்தோனேசியாவிலும் தோன்றியது. 20 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் இந்தியாவிலும், சொமொரோஸ், மொரீஸியஸ், றியூனியன் சீசில்ஸ் ஆகிய இந்து சமுத்திர தீவுகளிலும் தோன்றியது. 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் வரையிலும், இந்தியாவின் 8 மாநிலங்களிலுள்ள 151 மாவட்டங்களில் சிக்குன்கூனியா காய்ச்சல் தோன்றியது. கர்நாடகா மாநிலத்தில் 752,245 பேருக்கும், மகாராஸ்திரா மாநிலத்தில் 258,998 பேருக்குமாக இந்தியவில் மொத்தம் 1.25 மில்லியன் மக்களுக்கு இந் நோய் உண்டானது.

## நோயின் அறிகுறிகள்

சிக்குன்கூனியா நோய் பீடித்தவர்களுக்கு 39 பாகை செண்டிகிறேட் அளவில் காய்ச்சல் உண்டாகும். செம்புள்ளிகள் அல்லது அம்மை நோய் போன்ற அடையாளங்கள் உடலில் தோன்றும். உடலின் பல மூட்டுகளில் வலி உண்டாகும். இதை விட தலை வலி, கண்



நோய் போன்றவையும் தோன்றலாம். காய்ச்சல் இரண்டு நாட்களில் இல்லாமல் போனாலும், தலைவலி, மூட்டு வலி ஆகியன 5 தொடக்கம் 7 நாட்களுக்கு தொடரலாம். இந்த நோயினால் உயிரழப்புகள் ஏற்படுவதில்லை. காய்ச்சலையும், மூட்டு வலிகளையும் கட்டுப்படுத்தினால் உயிருக்கு ஆபத்து இல்லை.

எமது தாயகத்தில் போதிய மருத்துவ வசதிகள் இல்லை, அடிப்படை மருந்துகள் கூட கிடைப்பதில்லை. உதாரணமாக தலையிடி, காய்ச்சலைக் குறைக்கக் கூடிய மருந்துகள் கூட கிடைப்பதில்லை. அதனால் சிக்குன்கூனியா நோய் பீடித்தவர்களுள், முதியவர்கள் மற்றும் ஏற்கனவே சில நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் இறக்க நேரிட்டது.

## நோயிற்குரிய சிகிச்சைகள்

இது ஒரு வைரசு நோயென்பதால் குறிப்பிடத்தக்க சிகிச்சை முறைகள் இல்லை. இதற்கான தடுப்பு மருந்துகளைத் தயாரிக்கும் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. குளோரோக்குயின் என்ற மருந்து சிக்குன்கூனியா வைரசின் தாக்கத்தை ஓரளவு குறைக்கக் கூடியது என்று கருதப்படுகின்றது. அத்துடன் பொதுவாக மூட்டு வாதம், வலி போன்றவற்றிற்கு உபயோகிக்கும் “அஸ்பிரின்” மருந்தும் இந்த நோயின் தாக்கத்தைக் குறைக்கக் கூடியதென கருதப்படுகின்றது..

## நோயைத் தடுக்கும் வழிகள்

இந்த நோயினை உருவாக்கும் வைரசு ஆனது, நுளம்பினாலேயே மனிதரிலிருந்து மனிதருக்கு கடத்தப்படுகின்றது. நோயுள்ள ஒருவரைக் கடிக்கும் நுளம்பினுள் வைரசு உட்செல்லுகின்றது, பின்னர் அந்த நுளம்பு வேறு ஒரு சுகதேகியை கடிக்கும் போது அவரினுள் வைரசு நுழைந்து நோயை உருவாக்கலாம். வேறு வழிகளில் நோய் பரவுவதில்லை. எனவே நுளம்புக் கடியை தடுப்பதின் மூலம் நோய் பரவுவதைத் தடுக்கலாம். முதலில் நுளம்பு பெருகுவதைத் தடுக்க வேண்டும். மழைநீர் தேங்கி நிற்கக் கூடிய பழம் டயர்கள், பூச்சாடிகள், பழம் பாத்திரங்கள் போன்றவற்றில் தண்ணீர் தேங்காது பார்க்க வேண்டும். மேலும் நுளம்புகளை கொல்லக் கூடிய மருந்துகளை விசிற வேண்டும். அப்படியும் அழிக்க முடியாது பெருமளவில் நுளம்புகள் பெருகி இருந்தால், நுளம்புகள் எம்மைக் கடிக்காது பார்க்க வேண்டும். வெளியில் முக்கியமாக இரவு நேரங்களில் செல்லும்போது முழுக்கைச் சட்டை போன்ற நீளமான உடைகளை அணிய வேண்டும். வீட்டில் இருக்கும் போது நுளம்பு திரிகள் மற்றும் நுளம்புகளை விரட்டக் கூடிய எண்ணைகள், திரவங்களை உபயோகித்தல், மற்றும் உறங்கும் போது நுளம்பு வலைகள் போன்றவற்றை உபயோகிக்க வெண்டும்.

எனவே தாயகத்தில் சில உயிரிழப்புகள் அங்கு நிலவும் குறைந்த மருத்துவ வசதிகளால் ஏற்பட்டாலும், சிக்குன்கூனியா நோய் சார்ஸ், பறவைக் காய்ச்சல் போன்று பெரும் அழிவை உண்டாக்கக் கூடிய நோய் அல்ல.

**- விஜே குலத்துங்கம்**



# நான் செய்தது சரியா எனும் சந்தேகம்

ஒரு விடயம் பார்வைக்கு எப்படித் தென்பட்டாலும் சரி அதில் எனது பங்கை என்னால் இயன்றவரை சிறப்பாகவே செய்தேன் எனும் உண்மையை இன்று நான் அங்கீகரிக்கிறேன்.

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் (95)

அந்தச் சந்தர்ப்பத்தில் உன்னால் வேறு என்ன செய்திருக்கமுடியும்? அந்த துன்பம் தரும் அநுபவத்தை இரைமீட்டு உனது மனம் திரும்பத்திரும்ப அசைபோட்டுக் கொண்டிருக்கிறதே! உனது பதில்கள், செய்கைகள் பற்றி உனது உள்ளம் மீண்டும் மீண்டும் சிந்திப்பதால் உன்னை நீயே சந்தேகித்து, கேள்விகளால் துளைத்தெடுத்துக் கொண்டிருக்கிறாயே? இப்படி உன்னை நீயே வருத்தி கதிகலங்கச் செய்வதை விட்டு, இந்தக் கேள்விக்குப் பதில் சொல் பார்க்கலாம்! “வேறு எப்படி நான் செயற்பட்டிருக்க முடியும்? இதற்கும் மேலாக”, இதைவிட நன்றாய் நீ அதை சமாளித்திருக்கலாம் என்றால், ஏன் நீ அதைச் செய்ய முன்வரவில்லை?

பிரஸ்தாப சம்பவத்தின் போது, நீ இன்னும் கருணையுடன் இரக்கத்துடன் நடந்திருக்கலாமா? தயை மிகு பச்சாபத்துடன் கூடிய விவேகத்துடன், புரிந்துணர்வுடன் செயற்பட்டிருக்கலாமா? பொறுமையைக் கடைப்பிடித்திருக்கலாமா? சகிப்புத் தன்மையை உபயோகித்து கூடக் கவனமாக இருந்திருக்கலாமா? ஆமாம்! நீ என்ன நினைக்கிறாய்? இன்னும் கூடக் கதைத்திருக்கலாமா? அல்லது குறைவாக இன்னும் கூட உற்றுக் கேட்டிருக்கலாமா? இன்னும் சிறப்பாகத் திட்டமிட்டிருக்கலாமா? இன்னும் கொஞ்சம் காத்துக் கொண்டிருக்கலாமா? ஆமாம்! இவற்றையெல்லாம் நீ செய்திருக்கலாம்! ஆனால் என்ன செய்வது! நீதான் இவற்றில் ஒன்றையாவது அப்போ செய்யவில்லையே!

பிரியமானவரே! நீ செய்த தவறை உணர்ந்தால் ஏற்படும் குற்ற உணர்வு, உன்னை நிலைகுலையப்பண்ணி மனதைக் குழப்பியடித்து, உன்னைக் கீழே தள்ளி வீழ்த்தும் நிலையில், ஒரு தெய்வீக அற்புதம் உனக்காகக் காத்திருக்கிறது. ஒருபோதும் நினைத்தே பார்த்திருக்காத மாதிரி, மிகச் சுலபமான, எளிதான ஒன்றினை நீ நேருக்கு நேராய் தரிசிக்கப் போகிறாய். ஆமாம்! அந்த அநுபவத்தின்போது வேறு ஏதாவது வித்தியாசமான மாதிரி உன்னால் செயற்பட்டிருக்க முடியுமாய் இருந்திருந்தால், நிச்சயம் நீ அவ்வாறு செயற்பட்டிருப்பாய். நீ அவ்வாறு செயற்படாமற் போனதற்கு, உனக்கு இப்போ புரியாத, வேறு முக்கிய காரணங்கள் இருக்கலாம்.

நேற்று நடந்ததைப்பற்றி, புதிதாக இன்று அநுமானிக்க முடியாது. முன்பு செய்த தவறுகளுக்காக, உன்னையே நீ தண்டித்துக் கொண்டிருப்பதால், உனக்கு நடக்கப்போகும் நன்மைகளை நீ பெற்றிட முடியாது. முன்பு நீ செய்த அல்லது செய்யாமல் விட்டவற்றிற்கான யதார்த்த நிலையை நீ அங்கீகரிக்கும்போது, எதிர்காலத்தில் கட்டாயம் சிறப்பாகச் செயற்படுவாய் என்ற நற்செய்தி உனக்குத் தெரியவரும்.

“ஐயோ கடவுளே! நான் அதை இப்படிச் செய்திருக்கலாமே! இதை அப்படிச் செய்திருக்கலாமே!” என எண்ணி எண்ணி இன்றுவரை நீ மாய்ந்திருக்கலாம். இப்படிச் சிந்திப்பதால் துன்பகரமான படுகுழிக்குள் நீயே உன்னை தள்ளியிருக்கலாம். உன்னால் இயன்றவரை செய்ய முடிந்தவற்றையெல்லாம் நீ நிறைவாகச் செய்துவிட்டாய் என்பதை இன்று உணர்ந்துகொள். நீ கண்டது, கேட்டது, உணர்ந்தது, அநுபவித்தது யாவற்றையும் அவதானத்துடன் கவனித்துக்கொள். இவற்றை நீ வருங்காலத்தில் சிறப்பாகச் செயற்பட உதவ உபயோகித்துக் கொள். அநுபவம் போன்ற சிறந்த ஆசான் இல்லை அல்லவா?

வாழ்வில் இதுவரை நான் கூடியமட்டும் சிறப்பாகத் தான் என்னால் செயற்பட்டிருக்கிறேன் எனும் உண்மையை இன்று மனதார அங்கீகரிக்கின்றேன்.

*மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214*



**லலிதா புரூடி**


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# ஆனந்தம் 2 - சத்குரு



சத்குரு ஜக்கி வாசுதேவ்

உலகில் ஆனந்தத் தேடுதல் மிகவும் தீவிரமாக நடந்திருக்கிறது. மனிதன் செய்கிற ஒவ்வொரு செயலும் அந்த நோக்கத்தில்தான் நடந்திருக்கிறது. நம்முடைய ஆனந்தத் தேடுதல் எந்த அளவிற்கு நடந்திருக்கிறது என்றால், இந்த பூமிக்கே பாதுகாப்பில்லாமல் போகின்ற அளவிற்கு நமது ஆனந்தத் தேடுதல் நடந்திருக்கிறது. மனிதனுடைய செயலினால் இந்த பூமிக்கே பாதுகாப்பில்லாத ஒரு சூழ்நிலையினை நாம் உருவாக்கியிருக்கிறோம். அப்படியிருப்பினும் ஆனந்தம் மட்டும் வரவில்லை. மகிழ்ச்சியின் தேடுதலில் நாம் எதைச் செய்திருந்தாலும், அது, இந்த கிரகத்தின் உயிரினங்களை வெகுவாக பாதித்திருக்கிறது. நமக்கு இந்த அனைத்து வகையான சுகத்தையும், வசதியையும் தருவதற்கு ஒவ்வொரு புழு, பூச்சி, பறவை, விலங்கு மற்றும் மரம் யாவும் மிகப் பெருமளவில் அழிவுகளைச் சந்தித்திருக் கின்றன. இந்தக் கிரகமே கூட பேரழிவை சந்தித்துக் கொண்டிருக்கிறது. இவையனைத்தும் நடந்திருந்தும், நாம் மகிழ்ச்சியாகக் கூட இல்லை. உண்மையில், நாம் இந்த கிரகத்தை எரித்துக் கொண்டிருக்கிறோம். ஆனாலும், நாம் மகிழ்ச்சியாய் இல்லை. நீங்கள் பரவசநிலையில் இருக்கிறீர்களெனில், இந்த கிரகத்தை எரித்துக்கொள்ளுங்கள், பரவாயில்லை. நீங்கள் மகிழ்ச்சியாகக் கூட இல்லை. இதுபோன்று கிரகத்தை அழிக்கும் செயல் தேவையற்றது. இல்லையா? தற்போது இத்தகைய செயல்கள் மனித இயல்பாகிவிட்டது.

இதுவரை அத்தகைய செயல்கள் மற்ற உயிரினங்களின் இயல்பாக மட்டுமே இருந்தது. நீங்கள் உள்நிலையில் எதையும் செய்யாமல், வெளிநிலையில் மேலும் மேலும் சீர்படுத்திக் கொண்டிருந்தால், காலம் செல்லச் செல்ல அதுவே மனிதத்தன்மை என்று ஆகிவிடும். கடந்த 100 முதல் 200 ஆண்டுகளில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் துணைகொண்டு, இப்பூமியில் நாம் ஏராளமான செயல்களைச் செய்துள்ளோம். 100 வருடங்களுக்கு முன்னர் மக்கள் எத்தகைய வாழ்க்கையை வாழ்ந்தார்கள், தற்போது நாம் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? இதனை பொருளாதார நிலையில், சௌகரியங்களின் நிலையில் பார்த்தால், இதற்கு முன்னர் எந்தவொரு தலைமுறையும் உணராத, கற்பனையும் செய்திருக்கமுடியாத அளவிற்கு இப்பொழுது நமக்கு சௌகரியங்கள் வந்திருக்கிறது. ஓர் அரசனுக்குக் கூட இருந்திராத சௌகரியங்கள், தற்பொழுது ஒரு சாதாரண மனிதனுக்கும் அவனது வாழ்க்கையில் கிடைக்கிறது. இருப்பினும் ஆனந்தம் வரவில்லையே, ஏன்? இந்த உலகில் இந்த தலைமுறைதான், நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த தலைமுறைதான், மிகவும் சௌகரியமாக வாழ்ந்துகொண்டிருக்கிற தலைமுறை. அப்படியிருந்தாலும், மற்ற எல்லா தலை முறையினரையும் விட மேலான ஆனந்தத்தில் நீங்கள் இருக்கிறீர்களா? அப்படி இல்லையல்லவா. நிச்சயமாக நாம்தான் இந்த கிரகத்தில் அதிக வசதியிலிருக்கும் தலைமுறை, ஆனால் நீங்கள்தான் இந்த கிரகத்தின் மிக ஆனந்தமான தலைமுறை என்று சொல்லமுடியுமா? இல்லை, உண்மையில் அப்படியில்லை. இந்தத் தலைமுறைதான் பலவழிகளில், இக்கிரகத்தின் கவலை மற்றும் நரம்புக் கோளாறுடைய தலைமுறையாக மாறிவருகிறது. எனவே ஏதோவொரு நிலையில் அதிக அளவு சௌகரி யங்களை நமது செயல்கள் உருவாக்கித் தந்திருந்தாலும், அனுபவநிலையில் மனிதனின் அனுபவம் பெரிதாக மாறவில்லை. உண்மையில், அவர்கள் முன்னெப்போதையும் விட, அதிக கவலையோடும் அதிக அளவில் பாதுகாப்பற்ற உணர்விலும் உள்ளார்கள். எனவே மென்மேலும் பலவற்றைப் படிப்படியாக உருவாக்குவதிலும், மென்மேலும் பலவற்றைச் செய்வதினாலும், ஒவ்வொரு மனிதனும் ஏங்கிக்கொண்டிருக்கும் ஆனந்தமான உலகை உருவாக்கும் வாய்ப்பு மற்றும் சாத்தியம் நிகழப்போவதில்லை. ஏனெனில், நாம் வெளிநிலையில் சாத்தியங்களை கணிசமான அளவில் ஒழுங்குபடுத்திவிட்டோம். ஆனால் வாழ்வின் அடிப்படை அனுபவம் இன்னும் மாறவில்லை. இந்தியாவில் வேண்டுமானால், இன்னும் ஏராளமானவை செய்யப்பட வேண்டியிருக்கலாம், ஆனால் மேற்கத்திய நாடுகளில் வெளியுலகத் தேவைகள் போதுமான அளவு ஒழுங்குப்படுத்தப் பட்டுவிட்டன. அப்படியிருந்தும் மக்கள் எவ்விதத்திலும் மகிழ்ச்சியாய் இல்லை. எதனால் இப்படி? பொதுவாக, நமக்குத் தேவையானதெல்லாம் கிடைத்துவிட்டால் நாம் மகிழ்ச்சியாக, ஆனந்தமாக இருக்கப் போகிறோம் என்ற நம்பிக்கை எப்பொழுதுமே மனிதன் மனதில் இருக்கிறது.

ஆனந்தம் என்பதை உங்களுக்குள் உணர்கிறீர்களா? அல்லது அது ஆகாயத்திலிருந்து உங்கள் மேல் விழுந்ததா? இதனை நீங்கள் கவனித்துப்பார்த்தால், மகிழ்ச்சி, ஆனந்தம் எதுவாக இருந்தாலும் எப்பொழுதுமே அது உங்கள் உள்ளிருந்துதான் வெளிப்பட்டிருக்கிறது. அப்படியென்றால், இந்த ஆனந்தத்திற்கு மூலம் நமக்குள்தான் இருக்கின்றது. ஆனால் உங்களுக்குள் இருப்பதை நீங்கள் வெளியே தேடிக் கொண்டிருக்கிறீர்கள். வெளியில் நாம் ஆனந்தத்தைத் தேடிக்கொண்டிருக்கிறோமோ என்றால் இல்லை. நமக்குள் இருக்கிற ஆனந்தத்தை உணரவைக்கக்கூடிய தூண்டுதலையே நாம் வெளியே தேடிக் கொண்டிருக்கிறோம். இது எவ்வாறெனில், நீங்கள் 50 வருடத்திற்கு முன்பு ஒரு கார் வாங்க வேண்டுமென்றால், அதனோடு இரண்டு வேலைக்காரர்களையும் நியமித்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், காரினைத் தள்ளிவிட்டால் தான் அது ஓடத்துவங்கும். 30 வருடங்களுக்கு முன்பு ஒரு கார் வாங்கியிருந்தால், உங்களுக்கு 2 வேலைக்காரர்கள் தேவையில்லை, ஒருவர் இருந்தால் போதும். ஏனென்றால், அதனைத் தள்ளாமல், எஞ்சினை இயங்கச் செய்ய ஒரு சுழற்றியைப் போட்டு சுற்றினால் அது ஓடத்துவங்கும். ஆனால் தற்போது, உங்கள் வாகனங்கள் எல்லாமே தானியங்கி ஆகிவிட்டது. வெறுமனே ஒரு சாவியினைப் பயன்படுத்தினாலே உங்கள் வாகனம் ஓடத்துவங்குகிறது. அதேபோல, உங்கள் ஆனந்தத்தினை தள்ளிவிட்டு இயங்கச் செய்கிற நிலையில் வைத்துக்கொள்ளலாமா, அல்லது தானாக இயங்குகிற நிலையில் வைத்துக்கொள்ளலாமா? இதனை ஒவ்வொரு மனிதருமே நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்.

*ஈஷா யோக மையம் - வெள்ளியங்கிரி மலைச்சாரல், கோயம்புத்தூர்*
*E-mail: yogacenter@ishafoundation.org*
*website: www.ishafoundation.org or www.ishayoga.org*
ரொறொன்ரோவில் தொடர்புகளுக்கு: 416.699.0951

BREAD MASTER BAKERY

புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்ட வெதுப்பகம் பல்வேறு வகையான உணவுத் தயாரிப்புக்களுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.



- ரொட்டி வகைகள்
- புரியாணி வகைகள்
- புட்டு வகைகள்
- மரக்கறிச் சாப்பாடு
- சிக்கின், மட்டன் சாப்பாடு
- இடியப்பம்
- நூடில்ஸ்

ஓடர்கள் (Order) ஏற்றுக்கொள்ளப்படும்

*மற்றும் சிற்றுண்டி வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்*

கடை திறக்கும் நேரம்
காலை 6:00 மணி முதல்
இரவு 10:00 வரை



உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள்

416.299.5083

31 Tapscott Rd. B3, Scarborough
Malvern Area

SAFETY TRUCKS

Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (13 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

20 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3

# நட்டஈடு தீர்மானம் தொடர் - 4

### பொறுப்புக் காப்புறுதி பிரிவு *(Liability Coverage)* எவ்வளவு தொகை வரை நட்டஈடு வழங்கும்?

வீதிகளில் நடைபெறும் வாகன விபத்துகளின் போது சரி! பிழை என்பதனை தீர்மானிக்கும் மாகாண அரசின் காப்புறுதி சட்டம் என்பது (Ontario auto Insurance law act accident fault determination rules & regulation)

அவசர நோக்கில் முந்தி அடித்து கொண்டு வாகனம் செலுத்த போய் விபத்துகளை உருவாக்குபவர்களை எந்த வகையிலும் தப்ப முடியாத அளவுக்கு "குற்றத்துக்கு உரியவர்" என்ற நிலைமைக்கு கொண்டு வந்து விடுகின்றது என்பதற்கு கீழே உள்ள விபத்து நடந்த மாதிரி படத்தில் காட்டப்படும் சம்பவம் ஓர் உதாரணமாக எடுத்து காட்டப்படுகின்றது.

இங்கு விபத்து நடந்த இம் மாதிரி உருவப்படத்தினையும், நடந்த விதம் எப்படி என்பதனையும் சற்று உற்றுப் பாருங்கள். இது ஒரு பக்கமாக வாகனம் செலுத்த என இருக்கும் ஒரு தனி பாதை ஒழுங்கை! என்பதுடன் எதிர்பக்கத்தில் இருந்து வரும் வாகனத்திற்கும் ஒரே பக்கமாக வந்து கொண்டிருக்கும் தனி பாதை ஒழுங்கை! என இரு ஒழுங்கைகள் போக, வர என உருவாக்கப்பட்டுள்ளது.

ஒரே பக்கமாக போகும் மற்றும் எதிர்பக்கமாக வரும் இவ்விரு தனித்தனி ஒழுங்கைகளையும் நடுவில் பிரித்து காட்டும் "உடைக்கப்பட்ட மஞ்சள் கோடுகள்" என்ற கோட்டினால் பிரிக்கப்பட்டுள்ளது. (அதாவது "Broken Yellow Linens" என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுவது உண்டு.)


சிவ. பஞ்சலிங்கம் B. Com,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


அனேகமாக மக்கள் செறிந்து வாழும் நகரங்களுக்கு அப்பால் வெட்ட வெளிகளில் உள்ள வாகன செறிவுகள் குறைந்த நேர் வீதிகளின் இரு பகுதியினையும் பிரிப்பதற்கு இவ் "உடைக்கப்பட்ட மஞ்சள் கோடுகள்" போட்டிருப்பது அவதானித்து இருப்பீர்கள்.

இவ் "உடைக்கப்பட்ட மஞ்சள் கோட்டினால்" பிரிக்கப்பட்ட வீதியில் வாகனம் செலுத்துபவர் களுக்கு வீதி ஒழுங்கு சட்டப்படி (Traffic Law) ஒரு சிறு சலுகை உண்டு. அந்த சலுகை வேறு ஒன்றுமல்ல!

முன்னால் போகும் வாகனம் மெதுவாக போய் பின்னால் தொடர்ந்து வருகின்றவரை கால-தாமதம் செய்து கொண்டிருந்தால், எதிர்பக்கத்தில் இருந்து வாகனங்கள் ஒன்றும் வராவிட்டால் எதிர்ப்பக்க ஒழுங்கைக்கு மாறி முந்தி எடுத்து கொண்டு விரைவாக (Overtake through opposite side lane) முன்னுக்கு போகலாம். இப்படி ஒரு வீதியில் மேலே குறிப்பிடப்பட்ட மாதிரி படத்தில் உள்ள மாதிரியான ஒரு விபத்து நடந்தது என கருத்தில் கொள்வோம்.

இத்தகைய ஒரு வீதியில் வந்து கொண்டிருந்த (A) என்பவர், ஒரு தனியார் ஒழுங்கை, அல்லது வீட்டு பாதை, ஒன்றினுள் இடது பக்கம் திருப்ப முயற்சிக்கின்றார். அந்தக் கணத்தில் இந்த (A) என்பவரின் பின்னால் இரு வாகனங்கள்! இம்மூன்று வாகங்களுக்கு பின்னால் நான்காவதாக நின்ற (B) என்பவர் எதிர்பக்கமாக வரும் ஒழுங்கைக்கு மாறி முந்தியடித்து, கொண்டு ஓட முயற்சிக்கும் போது இடது பக்கம் திருப்பும் (A) என்ற வாகனத்துடன் எதிர் பக்கமாக வரும் ஒழுங்கையில் விபத்துக்கு உள்ளாகின்றது. இதில் தப்பு யார் பக்கம்? தப்பு இல்லாதவர் யார்?




இதுவே இங்கு எழுப்பப்படும் கேள்வி! விபத்துகளில் சரி! பிழை என்பதனை தீர்மானிக்கும் சட்ட புத்தகத்தில் ஆங்கிலத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

IF the incident occurs when automobile (A) is turning left at a private road or a drive way and automobile (B) is passing one or more automobile stoped behind automobile (A), the driver of automobile (A) is not at fault and the driver of automobile (B) is 100% percent "AT FAULT" for the incident.

இச் சட்டத்தின் பிரகாரம் (B) என்பவர் 100% குற்றவாளி! (A) என்பவர் 100% நிரபராதி! (சரி இவ் இடத்தில் நடந்த விபத்தில் ஒரு திருத்தம் என கருதுவோம். (A) என்பவருக்கு பின்னால் இரு வாகனங்களுக்கு பின்னால் நான்காவதாக நின்று அவசரப்பட்ட மாதிரி, இடையில் வாகனங்கள் எதுவும் நிற்காது (B) என்பவர் மட்டும் நின்று இதே பாணியில் அவரசப்பட்டு முந்தியடித்து கொண்டு ஓடப்போய் விபத்து நடந்து இருந்தால் இருவரினதும் சமவிகித பிழையாகவே சட்டம் தீர்மானிக்கும். விபத்துக்குள்ளான இருவரும் தத்தமது கம்பனிகளில் விபத்து அறிக்கைகளை சமர்பித்து நட்ட ஈடுகளை பெற்று கொள்ளலாம்.

சரி! இதில் (A) என்பவருடைய வாகனத்திற்கு சேதம் என வைத்து கொள்வோம். சாரதிக்கு! சேர்ந்து போனவர்களுக்கு பலமான உடல் காயங்கள் என கருத்தில் கொண்டால், இவரின் காப்புறுதி கம்பனி (A)என்பவருக்கு நட்டஈடுகளை வழங்கிவிட்டு, இவ்விபத்தில் 100% தப்பு என்ற நிலைமையில் நிற்கும் (B) என்பவரின் காப்புறுதி கம்பனியில் இருந்து தாம் வழங்கிய நட்டஈட்டு தொகைகளை அறவிட்டு கொள்ளும்.

(சில நேரம் (B) என்பவருக்கு வாகன காப்புறுதி இல்லாவிட்டால் அல்லது இருந்தும் காலாவதியாகி விட்டால் அவரின் கதி அதோகதிதான்!

காப்புறுதியில்லாமல் வாகனம் செலுத்தியதற்கு ஒரு தண்டனை. சரி இத் தண்டனை மட்டுமல்ல! (A) என்பவரின் காப்புறுதி கம்பனி இவ்விபத்தில் நிரபராதியான தமது வாடிக்கையாளருக்கு வழங்கிய முழுநட்ட ஈட்டினையும் சட்டரீதியாக நேரடியாக (B) என்பவரிடம் அறவிட முயற்சிக்கும். இப்பண கொடுப்பனவுக்காக சட்டம் அவரது சொத்துகளையும் அபகரிக்கும். தப்பிக்கொள்ள வேறு வழியே இல்லை.)

சரி இந்தக் குறிப்பிட்ட விபத்தில் 100% மான தப்பும் (B) என்பவரில் இருப்பதால் அவரே விபத்துக்குப் பொறுப்பாக இருப்பதென்பதாலும் இவரின் வாகனக் காப்புறுதி ஒப்பந்தத்தில் உள்ள "மூன்றாவது நபருக்கு வழங்கும் பொறுப்புக் காப்புறுதிப்பிரிவு" (Third party liavility insurance coverage) என்னும் பிரிவில் இருந்து (A) என்பவரின் காப்புறுதிக் கம்பனியினால் தமது வாடிக்கையாளரான (A) என்பவரின் வாகன திருத்த செலவுகள், விபத்தின் உடல் காயங்கள் ஆகியனவற்றுக்கு வழங்கப்பட்ட நட்டஈட்டு கொடுப்பனவுகளுக்காக பணம் கம்பனிக்கு கம்பனி கை மாறப்படுகின்றது. இதுவே வழமையாக நடைபெறும் ஒழுங்கு முறைகள் ஆகும்.

ஆனால் இதில் முக்கியமான ஒரு விடயம்! ஒன்ராரியோ மாகாண வாகன காப்புறுதி சட்டப்படி வாகன காப்புறுதியில் ஒவ்வொருவரும் குறைந்தது இந்த விபத்துகளில் ஏனையோருக்கு உருவாகும் பாதிப்புகளுக்கான பொறுப்பு காப்புறுதி என்ற ஒப்பந்தம் வைத்திருக்க வேண்டியது குறைந்தது $200,000 (இரண்டு இலட்சம்) என்பது சட்டரீதியான வரையறை ஆகும். இவ் (B) என்பவரின் வாகன காப்புறுதி ஒப்பந்தத்தில் உள்ள "பொறுப்பு காப்புறுதி" இரண்டு இலட்சம் டொலர் வரை மட்டும் இருந்தால், (B) என்பவரின் கம்பனியில் இருந்து இவ்வரையறைவரையே அறவிட்டு கொள்ளலாம்.

(ஆ) என்ற கம்பனியும் உடல்காயம் அடைந்த தமது வாடிக்கையாளருக்கு ஒரு வரைய-றைவரை மட்டுமே நட்ட ஈடு வழங்கும். இதுவே நடைமுறையில் உள்ள மரபு ஆகும். ஆனால் இங்கு விபத்தில் நிரபராதியாக நிற்கும் (A) என்பவரின் உடல்காயங்கள் என்பது ஓர் எல்லையினை தாண்டி வாழ்வில் சராசரியாக இயங்க முடியாத அளவுக்கு மோசமாக பாதிக்கப்பட்டால் (It means a loss or abnormality of a psychological, physiological or anatomal structure of fraction)

பாதிக்கப்பட்ட இந்நபர் தமக்கு, தமது வாழ்வின் புனர்வாழ்வுக்கு என மிக பெரிய மில்லியன் தொகைக்கு (B) என்பவரின் காப்புறுதி கம்பனிக்கு எதிராக வழக்கு தொடரும் அதிகாரம் விபத்தில் தப்பு எதுவும் இல்லாது பாதிக்கப்பட்டவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட (A) என்பவரின் மருத்துவ அத்தாட்சி பத்திரங்களை அடிப்படையாக வைத்து நட்டஈடு வழங்கும் தொகை தொடர்பாக நீதிமன்றம் ஒரு முடிவுக்கு வரும். மில்லியன் டொலர் நட்டஈடு வழங்க வேண்டும் என்ற நிலைமை ஏற்படும் போது (B) என்பவர் ஒரு இரண்டு இலட்சம் டொலர் வரையறை மட்டும் "பொறுப்பு காப்புறுதி" வைத்திருக்கும் நிலையில் காப்புறுதி கம்பனி என்ன செய்யும்?

இங்கு தான் "ABSOLUTE LIABILITY LAW" என்னும் சட்டபிரிவு பாதிக்கப்பட்டவரை பாதுகாக்கின்றது. அதாவது (B) என்பவரின் காப்புறுதி கம்பனி தமது வாடிக்கையாளரினால் பாதிக்கப்பட்டவருக்கு நீதிமன்றம் தீர்த்த மில்லியன் டொலர்களையும் வழங்கியே தீரவேண்டும். நட்டஈட்டினை வழங்கிவிட்டு (B) என்பவரின் காப்புறுதி கம்பனிக்கு என்ன செய்யும் அதிகாரம் உண்டு?

தமது வாடிக்கையாளர் செய்து கொண்ட "பொறுப்பு காப்புறுதி" க்கு மேலாக வழங்கிய தொகையினை தமது (B) என்ற வாடிக்கை யாளரிடம் சட்டரீதியாக அறவிட்டு கொள்ளும்.

இந்த நிலைமை (B) என்பவருக்கு ஏற்பட்டால் ஓடி ஒளிக்கவும் முடியாது. இந்த அனுபவத்தில் இருந்து நாம் யாவரும் படிக்க வேண்டிய பாடம் யாது?
தங்கள் ஒவ்வொருவரின் பொறுப்பு காப்புறுதியின் தொகை எவ்வளவு உள்ளது என கம்பனியோடு தொடர்பு கொண்டு பரிசீலனை செய்து பார்த்து, மேலதிக பணம் கொடுத்து சற்று மில்லியன் டொலரை அதிகரிப்பதே புத்திசாலித்தமான வழி!






வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.

பரம்ஜி - 416.230.1107

HOMELIFE HIGHER STANDARDS

PARAM GNANASWARAN
Broker
HOME LIFE GTA REALTY INC. Brokerage*
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
416.321.6969
Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
905.712.2666
* INDEPENDENTLY OWNED AND OPERATED
paramg@gmail.com

# ஆனைக்கும் அடிசறுக்கும்...!!!

## விளையாட்டுத் தகவல்கள் 207

முத்தரப்பு தொடர் 2-வது இறுதிப்போட்டி இங்கிலாந்து மாபெரும் வெற்றி, தொடரைக் கைப்பற்றியது.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் முத்தரப்பு ஒரு நாள் தொடரின் 2-வது இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியது. இதனால் இந்தத் தொடரை 2 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியது. முத்தரப்பு ஒரு நாள் தொடர் போட்டிகள் கடந்த ஒரு மாத காலத்திற்கு மேல் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வந்தது. இதில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து ஆகிய மூன்று அணிகள் கோப்பைக்காக பலப்பரீட்சை நடத்தின. முன்னதாக நடைபெற்ற லீக் போட்டியில் அவுஸ்திரேலிய அணி அதிக வெற்றிகளுடன் அதிக புள்ளிகள் பெற்று முதலில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. பின்பு இங்கிலாந்து அணி தட்டுத் தடுமாறி இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு முத்தரப்பு ஒரு நாள்தொடரில் முதல் இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் பரபரப்பான ஆட்டத்தில் இங்கிலாந்து அணி நான்கு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை தோற்கடித்து மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் 1 - 0 என்ற முன்னிலை பெற்றது. இதன் இரண்டாவது இறுதிப் போட்டி சிட்னியில் உள்ள துடுப்பாட்ட மைதானத்தில் நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி

**எஸ். கணேஷ்**

முதலில் பேட்டிங் செய்ய தீர்மானித்தது. இங்கிலாந்து அணியின் சார்பில் மல் லோயே மற்றும் எட்ஜாய்ஸ் இருவரும் ஆட்டத்தை துவக்கினர்.
முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் எட்டு விக்கெட்டுகளை இழந்து 246 ஓட்டங்களை எடுத்தது. அந்த அணியின் சார்பில் ஒரே ஒரு வீரர் மட்டும் அரை சதம் அடித்தார். இங்கிலாந்து அணியின் மிடில் ஆர்டர் பேட்ஸ்மேனான பால் காலிங்வுட் அதிகபட்சமாக 70 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் அவர் பிரேக்கன் வீசிய பந்தில் விக்கெட் கீப்பர் கில்கிறிஸ்டிடம் கேட்ச் கொடுத்து வெளியேறினார். அடுத்தபடியாக துவக்க வீரர் மல் லோயே 45 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் அவர் ஆட்டமிழந்தார். ஆல்ரவுண்டர் ஆன்ட்ரூ பிளின்டாப் 42 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் அவர் அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளரான பிரட்லீ வீசிய பந்தில் அவரிடமே கேட்ச் கொடுத்து பெவிலியன் திரும்பினார். தவிர, இயான் பெல் 26 ஓட்டங்களையும், எட்ஜாய்ஸ் 15 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆன்ட்ரூ ஸ்ட்ராஸ் ஆறு ஓட்டங்களையும், டல்ரிம்பில் ஐந்து ஓட்டத்தையும் எடுத்து அவுட்டானார்கள். மேலும் பால் நிக்சன் ஆறு ஓட்டத்தையும், பிளங்கெட் எட்டு ஓட்டத்தையும் எடுத்தனர்.

இங்கிலாந்து அணியின் சார்பில் மூன்று வீரர்கள் றண் அவுட் மூலம் ஆட்டமிழந்தது குறிப்பிடத்தக்கது. துவக்க வீரர் லோயே, மிடில் ஆர்டர் பேட்ஸ்மேன் இயான் பெல் மற்றும் டல்ரிம்பில் ஆகியோர் ஆட்ட மிழந்த வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்து அணியின் இன்னிங்சிங் போது இரண்டு முறை மழை குறுக்கிட்டது. அந்த அணி 15-வது ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 59 ஓட்டங்கள் என்ற நிலையிலும் மழை குறுக்கிட்டது. இந்த இரண்டு முறை மழை குறுக்கிட்ட பின்பு இங்கிலாந்து அணி ஒரு கட்டத்தில் மூன்று விக்கெட் இழப்பிற்கு 86 ஓட்டங்கள் என்ற நிலையில் தடுமாறிக் கொண்டிருந்தது. பின்பு காலிங்வுட்டின் பொறுப்பான ஆட்டத்தால் அந்த அணி சரிவிலிருந்து மீண்டு கௌரவமான புள்ளிவிபரத்தை எட்டியது. காலிங்வுட் ஏறக்குறைய 27ஓவர்களில் களத்தில் பொறுமையாக நின்று ஆடி அணியை காப்பாற்றினார். அவர் அணித்தலைவர் ஆன்ட்ரூ பிளின்டாப்புடன் இணைந்து ஐந்தாவது விக்கெட்டிற்கு 97 ஓட்டங்கள் சேர்த்தது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் நாதன் பிரேக்கன் 38 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டை கைப்பற்றினார். மூத்த வேகப்பந்து வீச்சாளரான கிளன் மெக்ராத் 41 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டை எடுத்தார். மற்றும் பிரட் லீ 53 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட் எடுத்தார். 247 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி பெறலாம் என்ற இலக்கை இங்கிலாந்து அணி, அவுஸ்திரேலிய அணிக்கு வைத்தது. அடுத்து களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 27ஓவரில் எட்டுவிக்கெட்டுகளை இழந்து 152 ஓட்டங்களை எடுத்து தோல்வி அடைந்தது. அவுஸ்திரேலிய அணியின் சார்பில் ஒரு வீரர்கள் கூட அரை சதத்தை தாண்டவில்லை. அந்த அணியின் மிடில் ஆர்டர் வீரரான ஹாட்கே அதிக பட்சமாக 49 ஓட்டங்களை எடுத்தார். அடுத்த படியாக வாட்சன் 37 ஓட்டங்களை எடுத்தார். தவிர, கில்கிறிஸ்ட் 20 ஓட்டங்களை எடுத்தார். முன்னதாக இந்த ஆட்டத்தில் மழை குறுக்கிட்டதால் டக்வொர்த் லூயிஸ் முறை அமல்படுத்தப்பட்டது. இதனால் அவுஸ்திரேலிய அணி தோல்வி அடைந்தது. சுருக்கமான புள்ளிவிபரம் - இங்கிலாந்து 50ஓவரில் எட்டு விக்கெட் இழப்பிற்கு 246 ஓட்டங்கள் எடுத்தது. அவுஸ்திரேலியா 27 ஓவரில் 152 ஓட்டங்கள் எடுத்தது.

### வெற்றியை நழுவ விட்டது இந்தியா, இலங்கை ஐந்து ஓட்டங்களில் வெற்றி

உலககிண்ணப்போட்டிகளுக்கு முன்பு ஒரே குழுவில் உள்ள இலங்கை அணியும் இந்திய அணிக்கும், இந்திய மண்ணில் நடக்கும் இப்பலப் பரீட்சை ரசிகர்களுக்கு நல்ல விருந்தாக அமையவுள்ளது. முரளிதரன், சமிந்தவாஸ் ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டு இலங்கை அணி இந்திய மண்ணில் களமிறங்கியது. இந்திய பேட்ஸ்மேன்கள் நிலை குலைந்ததால், தோல்வியைச் சந்தித்தது. இலங்கை அணி ஐந்து ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் அந்த அணி 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

இந்திய மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையே மொத்தம் நாலு போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் நடத்த திட்டமிடப்பட்டது. முன்னதாக கொல்கத்தாவில் முதல் போட்டி நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இந்தப் போட்டி மழை காரணமாக ரத்து ஆனது.

இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையேயான இரண்டாவது ஒரு நாள் போட்டி குஜராத் மாநிலம் ராஜ்கோட் நகரில் நடைபெற்றது. இதில் இந்திய அணி டாசில் வெற்றி பெற்று முதலில் பீல்டிங் செய்ய தீர்மானித்தது. இலங்கை அணி முதலில் பேட்டிங் செய்ய களமிறங்கியது. இலங்கை அணியின் சார்பில் உபுல் தரங்காவும், ஜெயசூரியாவும் ஆட்டத்தை துவக்கினர். இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் எட்டுவிக்கெட்டுகளை இழந்து 257 ஓட்டங்களை எடுத்தது. அந்த அணியின் சார்பில் ஒரு வீரர் சதமும், ஒரு வீரர் அரைசதமும் அடித்தனர். இலங்கை அணியின் நம்பகமான வீரரான குமார் சங்கக்கரா 110 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் அவர் முனாபப்படேல் வீசிய பந்தில் சேவாக்கிடம் கேட்ச் கொடுத்து வெளியேறினார். அவர் 125 பந்தில் 110 ஓட்டங்கள் அடித்தார். இது அவருக்கு ஆறாவது ஒரு நாள் போட்டி சதமாகும். மாதவராவ் சிந்தியா அரங்கத்தில் நடைபெற்ற இந்தப்போட்டியில் இலங்கை அணி ஒரு கட்டத்தில் 58 ஓட்டங்களுக்கு நாலு விக்கெட்டை இழந்து தடுமாறிக் கொண்டிருந்து. பின்பு சங்கக்கரா மற்றும் தில்ஷான் இருவரும் இணைந்து சதமடித்தனர். இலங்கை அணியின் துணைக் அணித்தலைவரான சங்கக்கரா வேகப் பந்து மற்றும் சுழற்பந்து ஆகிய இரண்டையும் நன்கு சமாளித்து ஆடி ஓட்டங்களைக் குவித்தார். இது அவர் பங்கேற்ற 187வது ஒருநாள் போட்டியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக அவர் 91 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் கும்ளே வீசிய பந்தில் அவரிடம் கேட்ச் கொடுத்தார். ஆனால் அந்த திடீர் கேட்சை கும்ளேவால் பிடிக்க முடியவில்லை. பின்பு அவரது பந்திலேயே 48வது ஓவரில் ஒரு சிக்சர் அடித்து தனது சதத்தை பூர்த்தி செய்தார் சங்கக்கரா. தில்ஷான் அவருக்கு பக்கபலமாக ஆடினார். அவர் 56 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் அவர் ஹர்பஜன் சிங் வீசிய பந்தில் கிளீன் போல்டானார். 30வயதான தில்ஷான் 65ப ந்துகளைச் சந்தித்தார். இதில் ஏழு பவுண்டரிகள் அடங்கும். இது அவருக்கு எட்டாவது அரை சதமாகும். இந்திய அணி சார்பில் முனாப் படேல் 50ஓட்டங்களைக் கொடுத்து நாலுவிக்கெட்டை வீழ்த்தினார். ஸ்ரீசாந்த் 39 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டுவிக்கெட்டை எடுத்தார். ஹர்பஜன் சிங்மற்றும் கும்ளே இருவரும் தலா ஒருவிக்கெட்டை எடுத்தனர்.

258 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி பெறலாம் என்ற இலக்கை இந்திய அணிக்கு இலங்கை வைத்தது. ஆனால் அடுத்து களமிறங்கிய இந்திய அணி 50வது ஓவரில் ஒன்பது விக்கெட் இழப்பிற்கு 252 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தது. இதனால் இலங்கை அணி ஐந்து ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்திய அணியின் சார்பில் முன்னாள் அணித்தலைவர் கங்குலி அதிக பட்சமாக 62 ஓட்டங்கள் எடுத்தார். டெண்டுல்கர் 54 ஓட்டங்கள் எடுத்தார். தோனி 48 ஓட்டங்களையும், திணேஷ் கார்த்திக் 31 ஓட்டங்களையும் எடுத்தனர்.

ஆட்டத்தின் 45வது ஓவர் வரை ஆட்டம் இந்தியாவின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தது. டெண்டுல்கர் மற்றும் கங்குலி இருவரும் இணைந்து மூன்றாவது விக்கெட்டிற்கு 100 ஓட்டங்கள் சேர்த்தனர். இந்த முடிவு ரசிகர்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருந்தது. இந்திய அணி கடைசி 27 பந்துகளில் 17 ஓட்டங்களை எடுத்து ஐந்து விக்கெட்டை இழந்தது. இதனால் மாதவராவ் சிந்தியா மைதானத்தில் திரண்டிருந்த ரசிகர்கள் ஏமாற்றத்தில் எழுந்து வெளியே சென்றனர். கடைசி ஓவரில் இந்தியாவிற்கு 11ஓட்டங்கள் எடுத;தால் வெற்றி என்ற நிலை இருந்து. அப்போது ஜெயசூரியா பந்துவீச வந்தார். கடைசி பந்திற்கு முந்தைய பந்தில் பவுண்டரி அடிக்க முயன்ற தோனி அவுட்டானார். இதனால் ஆட்டம்மேலும் சிக்கலானது. இறுதியில் இலங்கை ஐந்து ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சுருக்கமான புள்ளிவிபரம் - இலங்கை 50 ஓவரில் எட்டுவிக்கெட் இழப்பிற்கு 257 ஓட்டங்கள். இந்தியா - 50ஓவரில் ஒன்பது விக்கெட்இழப்பிறக்கு 252 ஓட்டங்கள்.

### ICC இன் தர வரிசை



ஐ.சி.சி தரவரிசைப் பட்டியலில் மீண்டும் முதல் 20 இடங்களுக்குள் இடம் பிடித்தார் சச்சின் டெண்டுல்கர்.

ஒருதின பேட்ஸ்மேன்கள் தரவரிசையில் கடந்த சில மாதங்களாக 22ஆம் இடத்தில் மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சின் இருந்தார். நடைபெற்று முடிந்த மேற்கிந்தியதீவுகளுக்கு எதிரான ஒரு தின தொடரில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்திய அணி தொடரை கைப்பற்ற முக்கிய காரணமாக இருந்தார். இதனையடுத்து வியாழக்கிழமை வெளியிடப்பட்ட ஐ.சி.சி தரவரிசைப் பட்டியலில் நாலு இடங்கள் முன்னேற்றம் கண்டு 18ம் இடத்தைப் பெற்றார் சச்சின்.

இந்திய அணியின் மற்றொரு வீரர் மகேந்திரசிங் தோனியும் தனது அதிரடியான ஆட்டத்தின் மூலம் ஆறாம் இடத்திலிருந்து நாலாம் இடத்துக்கு முன்னேறினார். மேற்கிந்தியதீவுகளுக்கு எதிரான ஒருதின தொடரில் சிறப்பான ஆட்டத்தை இருவரும் வெளிப்படுத்தியதாலே இவ்விருவரும் இத்தகைய முன்னேற்றத்தை எட்டியுள்ளனர்.

முதல் 20இடங்களுக்குள் சச்சின், தோனியைத் தவிர்த்து அணித்தலைவர் திராவிட் 12ஆம் இடத்திலும், யுவராஜ் சிங் 20வது இடத்திலும் உள்ளனர்.

முதல் இடத்தில் ஹுசே - அவுஸ்திரேலிய அணியில் உள்ள நாலு வீரர்கள் பேட்ஸ்மேன்கள் வரிசையில் முதல் 10 இடங்களுக்குள் இடம் பிடித்தனர். அந்த அணியின் மைக்ஹுசே 863 புள்ளிகளுடன் முதல் இடத்தை பெற்றார்.

ரிக்கி பாண்டிங் (763) மூன்றாம் இடத்திலும், ஆடம் கில்கிறிஸ்ட் 754) ஐந்தாம் இடத்திலும், ஆண்ட்ரூ சைமண்ட்ஸ் (753) ஆறாம் இடத்திலும், மைக்கேல் கிளார்க் (725) பத்தாம் இடத்திலும் உள்ளனர்.

இங்கிலாந்து அணியின் கெவின் பீட்டர்ஸ்ன் (763) இரண்டாம் இடத்தில் உள்ளார். ஏழு முதல் ஒன்பதாம் இடங்கள் வரை முறையே இலங்கை வீரர் சங்கக்கரா (747), கில்கிறிஸ் கெயில் (741), சனத்ஜயசூரிய (730) ஆகியோர் உள்ளனர்.

அணிகள் - ஒரு தின அணிகள் தரவரிசையில் இந்திய அணி ஆறாம் இடத்தையே பெற்றுள்ளது. மேற்கிந்தியதீவுகளுக்கு எதிரான ஒரு தினதொடரைக் கைப்பற்றிய போதும், புள்ளிக்கணக்கில் போதுமான முன்னேற்றம் இல்லாததால் இந்தியா ஆறாம் இடத்தையே தேக்கமடைந்துள்ளது.



அவுஸ்திரேலிய அணியை காட்டிலும் ஒன்பது புள்ளிகள் குறைவாக பெற்று தென்ஆபிரிக்க அணி இரண்டாம் இடத்தில் உள்ளது. இம்மாதம் நடைபெறவுள்ள பாகிஸ்தானுக்கு எதிரான ஒருதினதொடரை தென்ஆபிரிக்கா கைப்பற்றினால், அந்த அணி தரவரிசையில் அவுஸ்திரேலிய அணியை நெருங்கிவிடும்.

126 புள்ளிகளுடன் பாகிஸ்தான் மூன்றாம் இடத்திலும், நியூசிலாந்து (110) நாலாம் இடத்திலும், இலங்கை (109) ஐந்தாம் இடத்திலும் உள்ளன.

ஏழாம் இடத்தில் மேற்கிந்தியதீவுகள் (101) அணியும், எட்டுமுதல் 10ரை முறையே இங்கிலாந்து (97), வங்கதேசம் (41) சிம்பாப்பே (23) அணிகள் உள்ளன.

"TOMP TEN" பந்து வீச்சாளர்கள் - ஐ.சி.சி ஒருதின பந்துவீச்சாளர்களிலும் அவுஸ்திரேலிய அணி வீரர்களின் ஆதிக்கமே மேலோங்கி இருக்கிறது. அந்த அணியின் கிளென் மெக்ராத் (817) இரண்டாம் இடத்திலும், நாதன் பிராக்கென் (750) நாலாம் இடத்திலும், பிரட் லீ (750) ஐந்தாம் இடத்திலும், மைக்கேல் கிளார்க் (725) பத்தாம் இடத்திலும் உள்ளனர்.

தென்ஆபிரிக்க அணியின் ஷான் போலக் (910) புள்ளிகளுடன் முதல் இடத்திலும், மகாய நிதினி (742) ஆறாம் இடத்திலும் உள்ளனர். நியூசிலாந்து வீரர் டேனியல் வெட்டோரி (767) மூன்றாம்இடத்தைப் பெற்றுள்ளார். ஏழு முதல் ஒன்பது இடங்களில் சாமிந்த வாஸ் (741), சனத் ஜயசூரிய (730) உள்ளனர்.

'ஆல் ரவுண்டர்கள்" - தென்ஆபிரிக்காவின் ஷான் போலக் (477) முதல் இடத்திலும், கிறிஸ் கெயில் (422) இரண்டாம் இடத்திலும் உள்ளனர். மூன்று முதல் ஐந்தாம் இடங்கள் வரை பிளிண்டாஃப், ஜயசூரியா, சைமண்ட்ஸ் ஆகிய வீரர்கள் உள்ளனர். மோசமான ஃபார்மின் காரணமாக ஆல்ரவுண்டர்கள் வரிசையில் 21இம் இடத்துக்கு தள்ளப்பட்டார் பதான். ஹர்பஜன்சிங் 13ஆம் இடத்திலும், அகர்கர் 17ஆம் இடத்திலும் உள்ளனர்.




**வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?**

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்

**Kanthan: 416.291.3997**



• No Spraying • No Smelling • No Moving

# புதிய வீடு நிர்மாணிப்பவரை எவ்வாறு தெரிவு செய்தல்

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

புதிதாக கட்டப்படுகின்ற தனிவீடோ, அடுக்குமாடிக்கட்டிடத்திற்கான ஓர் அலகையோ வாங்குவதற்கு தீர்மானித்தால், முதல் முக்கியமானது இந்த தொகுதியை நிர்மாணம் செய்பவரை (Builder) சரியாகத் தெரிவு செய்தல் வேண்டும்.

*Ontario New Home Warranty Program (ONHWP) இதனை இப்பொழுது TARION என அழைக்கப்படுகின்றது. இதனால் தரப்பட்ட சில தகவல்களைக் கீழே பார்ப்போம்.*

• குறிப்பிடப்பட்ட Builder இன் After Sales Service இன் தராதரத்தை அறிதல் வேண்டும். இதனை ஏற்கனவே வாங்கியவர்கள் மூலம் அறியலாம்.)

• Builder இன் TARION இன் Registration இலக்கத்தையும், Entrolment இலக்கத்தையும் பெற்று TARION இன் குறிப்பிட்ட நிறுவனத்தைப்பற்றிய தகவல்களை பெறுதல் வேண்டும்.

• Builder உடன் கதைத்து வியாபாரத்திற்கு பிந்திய சேவைகளை கேட்டுக்கொள்ளல் வேண்டும்.

• இந்த Builder இனால் நிர்மாணம் செய்யப்பட்ட வீடுகளில் சிலவற்றை பார்வையிடுவதுடன், ஏற்கனவே வாங்கியவர்களுடன் தொடர்புகொண்டு, வியாபார நிறுவனத்தின் சேவைகளைப் பற்றி அறிதல் வேண்டும். குற்றங்களையும், நன்மைகளையும் சீர்பார்க்கலாம்.

• பொதுவாக நிதி நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்படும் புதிய வீடு வாங்குவது பற்றிய கலந்துரையாடல்களில் கலந்து அறிவு பெறுதல் சிறந்ததாகலாம்.

• Local Ontario Home Builders Association அல்லது Municipal Building Department உடன் தொடர்பு கொண்டு Reference பெறலாம்.

குறிப்பு - புதிதாக நிர்மாணம் செய்யப்படும் வீட்டை வாங்குபவர்கள், Model Home ஐ மட்டும் பார்த்து விட்டு முடிவு எடுத்தல் போதுமானதாகுமா? என்ற கேள்வி பொதுவாகக் கேட்கப்படுகின்றது. பொதுவாகவே Model Home சிறந்த, அதிகூடிய தரம் உள்ள கட்டிடபொருட்களைப் பாவித்தே கட்டப்பட்டு இருக்கும். ஆனால் வாங்குகின்ற வீடு, அனேகமாக, சாதாரண கட்டிடப் பொருட்களைப் பாவித்தே கட்டப்படும். எனவே இரண்டிற்கும் உரிய வித்தியாசத்தை மனதில் கொள்வது நல்லது.

இவ்வாறே அறைகளின் நீள அகலங்களையும் கற்பனை செய்து பார்க்கவும். அல்லது அனுபவமிக்கவர்களின் அறிவுறுத்தல்களைப் பெறவும். மேலே தரப்பட்ட தகவல்களையும் மனதில் கொள்ளவும்.

மேலதிக தவல்களிற்கு www.tarion.com

### கனேடிய வீடுச்சந்தையில் புதிய காப்புறுதி நிறுவனம்

கனேடிய வீட்டுச்சந்தையில், பொதுவாக வாங்கிய இல்லத்தின் விலையின் 25%இற்கு குறைவாக முதலீடு செய்தால், காப்புறுதி எடுத்தல் தேவை. இதுவே நடைமுறை. கனடாவில் இதுவரை இரண்டு நிறுவனங்கள், CMHC என அழைக்கப்படும் Canada Mortgage and housing Corporation மற்றும் GF என அழைக்கப்படும் Genworth Financial நிறுவனங்கள் இந்த காப்புறுதியை கொடுத்து வருகின்றன.

இப்பொழுது மூன்றாவது நிறுவனமான AIG யும் இந்த வியாபாரத்தில் இணைந்துள்ளது. இதனால் ஆஸ்திகள் வாங்குபவர்களிற்கு வசதிகள் கூடுகின்றது அல்லது வியாபார போட்டியினால் நுகர்வோரிற்கு சலுகைகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன.

முன்பு ஆகக்கூடியதாக 25 வருட Amortization காலமே நடைமுறையில் இருந்தது. இந்த நிலைமை இப்பொழுது 30, 35, 40 வருடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளதை விளம்பரவாசகர்கள் அறிந்ததே. புதிய நிறுவனத்தின் சேர்க்கையினால் Amortization காலம் 50 வருடமாக அதிகரிக்கலாம் என எதிர்வுகூறப்படுகின்றது. இத்துடன் "No Money Down" மோட்கேஜின் இறுக்கப்பாடுகளிலும் இந்நெகிழ்வுத்தன்மை ஏற்படலாம்.

### விற்பனையில் சாதனை - ஜனவரி 2007

வீட்டு வியாபாரச்சந்தையில் ஜனவரி அமைதியாகவே காணப்படுகின்ற மாதம். இதனையே புள்ளிவிபரங்கள் காட்டிநிற்கின்றன. இந்தவருடத்தின், ஆரம்பத்தில் ஏற்பட்ட காலநிலைமை மாற்றம் குளிரோ, பனியோ அற்ற காலநிலை. வீடுவிற்க வாங்குபவர்களிற்கு அனுகூலமாகக் காணப்பட்டது. இதனால் ஜனவரி 2007இல் கைமாறப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை, இதுவரையிலான ஜனவரிகளைவிட அதிகமாகக் காணப்படுகின்றது. 5173மனைகள் கைமாறியுள்ளது. இந்த எண்ணிக்கை, 2006 ஜனவரியில் கைமாறிய எண்ணிக்கையை விட 13% அதிகமாகும். (ஜனவரி 2006 இல் கைமாறிய எண்ணிக்கை 4,587 ஆகும்.) அத்துடன் சராசரி வீட்டுவிலையும் 353,724 ஆக அதிகரித்துள்ளது.



## தொடர் - 245

இந்த வருடம் (2007), வீட்டுச்சந்தையில் மந்தம் ஏற்படலாம் என எதிர்வுகூறப்பட்டு இருந்தபோதும், இந்த ஆரம்பம், இந்த ஆண்டை எவ்வாறு கொண்டு செல்லும் என்பதனை பொறுத்து இருந்து பார்ப்போம். இருந்தபோதும், பெப்ரவரி 2007 இன் ஆரம்பத்தில் காணப்படுகின்ற குளிர்கால, காலநிலை பெப்ரவரியில் வியாபாரத்தில் மந்தநிலை ஏற்படலாம் என எதிர்பார்க்கின்றபோதும் நிலைமை எப்படி இருக்கும்....




இப்பொழுது இரு இடங்களில்,

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

HomeLife Higher Standards

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**

145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

*Independently owned & operated

**Raja M. Mahendran,** P. Eng.

(Broker / Owner)

**New Condo. for sale**
- 2 bedroom + Den
- Balcony • 1 parking
- Immediate Occupancy
- Close to GTA Square, New Sathiya Sai Centre & Iyappan Temple

**Condo. For Rent**
- 1 bedroom or 2 bedroom
- Middlefield & Finch
- Available immediately
- Newer building

**Business space for lease**
- 1000 sqft
- Kennedy & Eglinton
- Vacant
- Next to Yogas Super Market

**Convenience store for sale**
- HWY 401 & Westney Ajax
- Reasonable Rent

**Office space for rent**
- Sheppard & Port Union
- 1900 sqft
- Gross rent $2,200

**Nantha Aiyadurai**

Cell: 613 850 9931

Coldwell Banker Coburn Realty

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service

OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# ஓர் உயிர் எங்கே?

பா(b)ர்வி பாவையோ பாவனாவோ
தாவித் துள்ளும் புள்ளிமானோ
இத்தனை பேருள்ளும்
ஏன் என்னுள்ளம்
அவள் ஒருத்திக்காய் ஏங்கித்
தவிக்கின்றது.

அறியேன் ஆயினும் பார்வை
அகற்றேன்
அருட்டும் தோழியால்
அவள் எனைக் கண்டாள்
பார்த்தாள் பொறி பறந்தது
விட்டேனா?

'நோக்கம்' வைத்தொரு நோக்கு
நோக்கினேன்
ஊக்கிகள் இயல்பில், மாறின.
சினத்த கண்களில் அதிசயம் சிலிர்க்க
நோக்கினாள் அவளும்!

கண்ணிமைகள் என்னைச் சிறைவைத்துத்
தாழ்ந்தன.
உள்ளமும் உடலும் ஒருங்கே பதற,
ஓ! கொலை கொலை!
ஈருயிர் ஒருயிரானதே.



**- காங்கயி -**

# திருவண்ணார்பண்ணை

பண்: திருத்தாண்டகம்

எல்லாமே வல்லவராம் எங்கும் உள்ளார்
இன்றன்றி என்றைக்கும் இருக்க வல்லார்
எல்லாமும் அறிவர்அறிந் தான வற்றை
ஏற்றவருக் கெடுத் துரைக்கும் குருவு மாவார்
நல்லோர்கள் இவ்வாறு நவின்ற தாலே
நம்பினேன் அன்பினால் நாடி வந்தேன்
வல்லார்கள் வாழ்கின்ற வண்ணார் பண்ணை
வைத்தீசு வரர்கருணை வைப்பா ரென்றே.

வானவரின் துயர்போக்கி வாழ வைத்தார்
வன்தொண்டர் வேண்டியவை வழங்கி நின்றார்
மோனநிலை கலைத்தவரை முனிந்து நின்றார்
முப்புரத்துக் கொடியவரை முடித்து நின்றார்
தேனமுதத் தமிழரிடர் தீர வில்லை
செய்வதறி யாதுதிகைத் தேங்கி வந்தேன்
மானமிகு தமிழர்பதி வண்ணார் பண்ணை
வைத்தீசு வரர்கருணை வைப்பா ரென்றே.

உருவேது மில்லாத உலக நாதர்
உள்ளத்துள் உறவாடி ஒளிரு நாதர்
அருவாய வல்வினைகள் அழிக்க வல்லார்
அசுரர்களின் கொடுமைகளை ஒழிக்க வல்லார்
கருவாய தமிழீழம் கனிய வில்லை
கதியின்றி நொந்துள்ளம் கலங்கி வந்தேன்
வருவாய்கள் வளர்கின்ற வண்ணார் பண்ணை
வைத்தீசு வரர்கருணை வைப்பா ரென்றே.

மழுமானும் மத்தளமும் ஏந்தி யுள்ளார்
மங்கைதனை இடப்பாகம் தாங்கி யுள்ளார்
பழிபாவம் அறியாத தமிழர் பாடு
படுகேடு நீதிக்குப் பாதை யில்லை
அழிவல்லல் தடுப்பதற் காரு மில்லை
அழுகின்றேன் தொழுகின்றேன் அடியில் வீழ்ந்தேன்
வழுவாத அறஞ்செய்யும் வண்ணார் பண்ணை
வைத்தீசு வரர்கருணை வைப்பா ரென்றே.

ஐந்துமுகத் தோடதோ முகமுங் கொண்டார்
ஐந்துகரப் பிள்யையின் அறிவுங் கண்டார்
தந்தைதாய் உலகென்று சார்ந்து போற்றும்
தமிழ்மக்கள் இனிமேலும் கொடுமை தாங்கார்
சிந்துவிழி சிவப்பேற அலைந்து வந்தேன்
தேட்டங்கள் அனைத்தையுமே இழந்து வந்தேன்
வந்தவரை வரவேற்கும் வண்ணார் பண்ணை
வைத்தீசு வரர்கருணை வைப்பா ரென்றே.

ஆறுதல்கள் கூறுதற்கோ யாரு மில்லை
அனைவருமே அகதிமுகாம் அடைந்த தாலே
மாறுகொளும் படையினரை அகற்ற வேண்டும்
மண்ணைத்தமிழ் வீரர்களே ஆள வேண்டும்
கூறிமுறை யிடவேறு யாரு மில்லை
கொள்ளமுடி யாதசுமை யோடு வந்தேன்
மாறிலருந் தொண்டர்தொழு வண்ணார் பண்ணை
வைத்தீசு வரர்கருணை வைப்பா ரென்றே.

உயர்வான கயிலைமலை ஆண்டி ருப்பார்
உலகாளும் அதிகாரம் பூண்டி ருப்பார்
அயராமல் உழைத்தோங்கும் ஈழ மண்ணை
அறிவில்லார் அழித்தாளப் பார்த்தி ருப்பார்
துயர்தாங்க முடியாது தொழுது வந்தேன்
தொல்புகழார் யாழ்ப்பாணம் துலங்க வாழும்
வயிரமா ளிகைவீதி வண்ணார் பண்ணை
வைத்தீசு வரர்கருணை வைப்பா ரென்றே.

இன்னிசையில் வல்லமுனிக் கிசைய வல்லார்
இராவணனின் பாடலுக்கும் இரங்கி நின்றார்
துன்னரிய ஆறுமுக நாவ லர்தம்
சொற்பொழிவு மாரியிலும் தோய்ந்து நின்றார்
என்னரிய தமிழீழ மக்கள் துன்பம்
இன்றைக்கே தீர்த்தருள வேண்டி வந்தேன்
மன்னரிருந் தாண்டயாழ் வண்ணார் பண்ணை
வைத்தீசு வரர்கருணை வைப்பா ரென்றே.

ஆறொன்றைச் சடையினிலே அணிந்தி ருப்பார்
அரைமதியும் அதில்வாழ இடம ளிப்பார்
ஆறில்லா ஊரழகு பாழுக் காமோ
அறிவில்லார் அநியாயம் கூழுக் காமோ
வேறில்லை வழியென்றே வணங்க வந்தேன்
விருப்புடனே நெடுங்காலம் நீறு தாங்கி
மாறில்லா நெறிநிற்கும் வண்ணார் பண்ணை
வைத்தீசு வரர்கருணை வைப்பா ரென்றே.

பணியதனைக் கழுத்தினிலே அணிந்தி ருப்பார்
பாவியர்கள் தொல்லைகளைத் துணிந்த ருப்பார்
மணியனைய தமிழீழம் மலர வேண்டும்
மானமுடன் தமிழ்மக்கள் வாழ வேண்டும்
அணியணியாய்த் திரளகதிக் கூட்டஞ் சேர்ந்தே
அல்லற்பட் டாற்றாமல் அழுது வந்தேன்
வணிகத்தால் வளம்பெருக்கும் வண்ணார் பண்ணை
வைத்தீசு வரர்கருணை வைப்பா ரென்றே.

*யாழ்ப்பாண மாநகரில் வண்ணார்பண்ணையில் அமைந்திருக்கும் இக் கோயில் ஒல்லாந்தர் ஆட்சியில் பெருஞ் செல்வாக்குற்றிருந்த வைத்திலிங்கச் செட்டியாரால் 1790ல் கட்டி முடிக்கப் பெற்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தமது முதற் சொற்பொழிவைச் செய்த திருவிடமும் இதுவேயாகும்.*

*இறைவர்: வைத்தீசுவரர்.*
*இறைவி: தையல்நாயகி.*

**கவிஞர் வி. கந்தவனம்**



# முல்லைத்தீவு

காடும்
காடுசூழ் நிலமும்
முல்லை எனும்
திணைப் பகுப்பில்
முல்லை மருதம்
நெய்தல் என்ற
மூன்று தூண்கள் நாட்டி
செந் நெற்கதிரால்
பந்தலிட்டு
வானவிற் கம்பத்தில்
பூந்தோரணங்கள் தொங்க,
நான்கு பருவம்
நரம்பு புடைக்க
நாகசுர இசையில்
உடல் நெழிந்து
ஆடி அசைந்து
நடனமாடும்
அலங்கார மேடையில்
ஒரு பக்கம் ஆழி
மறு பக்கம் ஆறு
நடுமுதுகில் பசுந்தரை
கோயில் குடியிருப்பில் குருசும்
கிழக்கே அல்லாவும்
தெற்கு வயலோரம் அம்பாளும்
கண் விழித்துக் காத்திருக்க,
இந்தக் கோட்டையினுள்ளும்
ஊழிக்குக் கூலி செய்யும்
காலன் புகுந்தாடினான்
சுனாமித் தாண்டவம்.

**முத்துராஜா**






## யோகா சோதிடம்

- *கிரகப் பொருத்தம் பார்த்தல்*
- *சுபமுகூர்த்தம் கணித்தல்*
- *பலன் பார்த்தல்*
- *சாதகக் குறிப்புக் கணித்தல்*

416-299-8361



S M I L E

- BUSINESS PLANS
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days

வெளிவந்துவிட்டது ...

தமிழர் வர்த்தக நிலையங்களின் விளம்பரங்களை மட்டுமே தாங்கிய வணிகம் வியாபாரக்கைநூல் 2007 வெளிவந்துவிட்டுது.

அதிக பிரதிகளுடன் வெளிவரும் ஒரேயொரு கைநூல் இதுவாகும்

உங்களுக்கு அருகாமையில் உள்ள வர்த்தக மற்றும் வணிகநிலையங்களிலும், உலகத்தமிழர் சமூக நூலகத்திலும் வணிகம் வியாபாரக்கைநூல் 2007 பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புக்கு: 416-335-0622



# “கதாநாயகன் வயலில் ஏர் உழும்போது கோட் - சூட்டில்தான் உழவேண்டும் என எதிர்பார்க்கிறார்கள் தமிழ் ரசிகர்கள்”

## நேர்காணல் : ஒளிப்பதிவாளர் சந்தோஷ் சிவன்



உலக அளவில் புகழ்பெற்ற தமிழ் சினிமா ஆளுமைகளில் ஒருவர் ஒளிப்பதிவாளர் சந்தோஷ் சிவன். மணிரத்னத்தின் “தளபதி” திரைப்படம் மூலமாக, மலையாளத்தில் இருந்து தமிழ் திரைப்படத் துறைக்கு அறிமுகமானார். ஒளிப்பதிவுக்கு அடுத்தபடியாக “மல்லி”, “டெரரிஸ்ட்”, “நவரஸா” ஆகிய மூன்று குறும்படங்களை இயக்கியுள்ளார். சர்வதேச திரைப்பட விழாக்களில் சந்தோஷ் சிவனுக்கு விருதுகளைப் பெற்றுத்தந்த இப்படங்கள் உலக திரைப்பட ஆர்வலர்களிடையே தமிழுக்கு ஒரு மரியாதையையும் ஏற்படுத்தின. ஐந்து முறை திரைப்பட ஒளிப்பதிவுக்காக இந்திய அரசின் தேசிய விருது பெற்றவர். இரண்டு முறை சர்வதேச விருதுகள் பெற்றுள்ளவர். பிரஞ்சு, ஆங்கிலத் திரைப்படங்கள் மற்றும் இந்திய அரசின் எயிட்ஸஞ்க்கான குறும்படம் என மிகவும் பிஸியாக இருக்கிறார் சந்தோஷ் சிவன். சென்னையில் புகழ்பெற்ற எம்.ஜி.ஆர். இல்லத்திலிருந்து சிறிது தொலைவில், ராமாவரத்தில் தென்னை மரங்கள் சூழ இருக்கும் அழகான சந்தோஷ் சிவன் இல்லத்தில் அவரைச் சந்தித்தோம்.

கேள்வி: இந்திய அளவில் மிகவும் முக்கியமான ஒளிப்பதிவாளராக அறியப்பட்ட நீங்கள், திடீரென்று ஒளிப்பதிவில் இருந்து விலகி இயக்கத்துக்கு வந்தீர்கள். ஏன்?

சந்தோஷ் சிவன்: நான் புனா திரைப்படக் கல்லூரியில் படித்தேன். அக்கல்லூரியில் மாணவர்கள் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக திரைப்படம் தயாரிக்க வேண்டும். நான் “டிம்புலுவின் கதை” என்ற திரைப்படத்தை இயக்கினேன். அதுதான் என் முதல் படம். அருணாசலப்பிரதேசம் முழுக்க சுற்றி, அங்கேயிருந்த மக்களை, அவர்களது வாழ்வை, இயற்கைக்கும் அவர்களுக்குமான உறவை ஒரு திட்டமில்லாமல் பதிவு செய்தேன். “டிம்புலுவின் கதை” உருவானது. ஒரு மணி நேரப் படம். இயற்கைக்கும் ஒரு சிறுமிக்கும் உள்ள உறவை அப்படம் சித்தரிக்கிறது. அப்படத்துக்கு 1988-ல் குறும்படத்துக்கான தேசிய விருது கிடைத்தது. அதன்பிறகு வாய்ப்புகள் இல்லாததால் இயக்குநர் சந்தோஷ்சிவனுக்கு வேலைகள் இல்லாமல் இருந்தது. எனவே, இயக்குநராக வந்திருக்க வேண்டியவன், ஒளிப்பதிவாளராக ஆனேன். இப்போது வாய்ப்புகள் உள்ளன. எனவே நானே இயக்கத்தை மீண்டும் தொடங்கிவிட்டேன்.

## சந்திப்பு: கிருஷ்ணா

கேள்வி: சர்வதேச அளவில் உங்களுக்கு ஒரு பெயரை உருவாக்கித் தந்தப் படம் “டெரரிஸ்ட”. புலிட்ஸ்டர் பரிசு பெற்ற திரைப்பட விமர்சகர் ரோஜர் எபர்ட், “டெரரிஸ்ட்”டை உலகின் சிறந்த நூறு படங்களில் ஒன்றாக கூறியுள்ளார். இதனைத் தயாரிக்கும் திட்டம் எப்படி உருவானது?

சந்தோஷ் சிவன்: ராஜீவ் காந்தி கொலைக்குப் பிறகுதான் தற்கொலைப் படை பற்றிய அறிதல் எனக்குக் கிடைத்தது. ஓர் இலட்சியத்துக்காக தங்களையே அழித்துக் கொள்வது சாதாரணமான ஒன்றல்ல. தற்கொலைத் தாக்குதலை நான் ஆதரிக்கவில்லை. ஆனால், அது எனக்குள் சிந்தனையைத் தூண்டிவிட்டது. அதனை மையமாகக் கொண்டு ஒரு திரைப்படம் தயாரிக்க வேண்டும் என்று எண்ணினேன். அப்படிதான் “டெரரிஸ்ட்” உருவானது. உயர்ந்த இலட்சியத்தை கொண்டுள்ள ஒரு பெண், எப்படி தன் வாழ்வை அழித்துக் கொள்கிறாள் என்பதை அப்படம் சித்திரிக்கிறது. தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளும் பதின்வயது இளைஞர்கள் அதில் வருகிறார்கள். பதிமூன்று தினங்களில் அப்படத்தை முடித்தோம். அது ஒரு வினோதமான அனுபவம். வன்முறையைப் பிரதானப்படுத்தாமல், விடயத்தையும் சிதைக்காமல் அப்படம் உருவாகி வந்தவிதம் எனக்கு மன நிறைவைத் தந்தது. அப்படம் முன்வைக்கும் செய்தி இதுதான்... ஒட்டுமொத்த சமூகத்தை மாற்றுவது எப்படி என்பதைவிட, தனிமனிதர்களுக்குள் சிந்தனையைத் தூண்டி விடுவதுதான் முக்கியம். நவீனகாலம் எதிர்கொண்டுள்ள பல்வேறு சிக்கல்களுக்கு அதன் மூலம்தான் தீர்வு காணமுடியும் என நம்புகிறேன்.

என்னுடைய ஒளிப்பதிவில் எனக்கு மிகவும் பிடித்தது “டெரரிஸ்ட” தான். இயல்பான ஒளியமைப்பும் காட்சியும் அப்படத்தில் இளையோடியிருக்கும். படத்தில் தண்ணீர் பிரதான கதாபாத்திரத்தின் மனத்தின் ஒரு குறியீடாக இருக்கும். சிறிய துகள்களில் தொடங்கி துளித்துளியாகி, நீர்திவளையாக விரிந்து பரவும். அதனை ஒளிப்பதிவு செய்யும் போதே மிகவும் பரவசமடைந்து செய்தேன்.

கேள்வி: நீங்கள் இயக்கிய “மல்ல”, “டெரரிஸ்ட்” , “நவரஸா” படங்களின் ஒளிப்பதிவுடன், மற்ற இயக்குநர்களின் படங்களுக்கு நீங்கள் செய்த ஒளிப்பதிவை ஒப்பிட்டால், உங்கள் இயக்கத்தில் வந்தவற்றில்தான் ஒளிப்பதிவு மிகச்சிறப்பாக இருக்கிறது. இதற்கு என்ன காரணம்?

சந்தோஷ் சிவன்: இதனை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. “ டெரரிஸ்ட” டுக்கு அடுத்தபடியாக அதிகம் பாராட்டை பெற்றது “இருவர்” படத்தின் ஒளிப்பதிவுதான். அதன்பிறகு “உயிரே” . ஆனால் நானே இயக்கும் படங்களில் ஒளிப்பதிவாளர் சந்தோஷ்சிவனுக்கு ஒரு சுதந்திரம் இருக்கிறது. நான் விரும்பியவற்றை அதில் செய்யலாம், அவ்வளவுதான்.

கேள்வி: நீங்கள் தர்ஷமாக நினைக்கும் ஒளிப்பதிவாளர் யார்?

சந்தோஷ் சிவன்: சுப்ரதோ மித்ரா. சத்யேஜித் ரேவின் காமிரா மேன்.

கேள்வி: “லைட்”டை உபயோகிக்காமல், இயற்கையாக இருக்கும் வெளிச்சத்தில் ஒளிப்பதிவு செய்வதுதான் சிறந்தது என பாலுமகேந்திரா ஒருமுறை சொன்னார். இதுகுறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

சந்தோஷ் சிவன்: பாலுமகேந்திரா அந்த அர்த்தத்தில் சொல்லியிருக்க மாட்டார், நீங்கள் தவறாக புரிந்து கொண்டிருக்கலாம். படம் பார்ப்பவர்களுக்கு “லைட்” உபயோகிக்காமல், இயற்கையாக இருக்கும் வெளிச்சத்தில் இக்காட்சி படம் பிடிக்கப்பட்டுள்ளது என்று தோன்றும்படி “லைட்” டை குறைவாக உபயோகித்து ஒளிப்பதிவு செய்வதை அவர் சொல்லியிருக்கலாம். “லைட்” டை உபயோகிக்காமல் ஒளிப்பதிவு செய்வது சாத்தியமும் இல்லை. ஆனால், அதிகமாக “லைட”டை உபயோகித்து எடுக்கப்படுவது சிறந்ததல்ல, குறைவாக “லைட்டை” உபயோகித்து எடுப்பதுதான் சிறந்தது என்ற கருத்துடன் எனக்கு உடன்பாடில்லை. இரண்டும் இரண்டு பாணிகள், அவ்வளவுதான். காட்சிக்கு, கதைக்கு, கதாபாத்திரத்துக்கு தக்கபடி பொருந்தி வரும்படி ஒளிப்பதிவு செய்வதுதான் முக்கியம். உலகத் தரமான கலைப்படங்களில் அதிகம் “லைட்” டை உபயோகித்து எடுக்கப்பட்ட படங்களும் உள்ளன.

கேள்வி: ஆனால், தமிழ் திரைப்படங்களில் “லைட்” மிக அதிகமாக இருக்கிறதே?

சந்தோஷ் சிவன்: நமது படங்கள் கதாநாயகனையும் கதாநாயகியையும் மையமாக கொண்ட படங்கள். இவர்களது ரசிகர்கள் இவர்கள் இரண்டு பேருக்காகவும்தான் படம் பார்க்க வருகிறார்கள். அவர்களுக்கு கதாநாயகனும் கதாநாயகியும் பளிச்சென்று வெளிச்சத்தில் இருந்தால்தான் பிடிக்கும். மங்கலான வெளிச்சத்தில் கதாநாயகனை காண்பித்தால் அப்புறம் அதில் எங்கே “ஹீரோயிஸம்” இருக்கிறது. நமது பார்வையாளர்கள், விடியற்காலையில் தூங்கி எழுந்து வரும்போதுகூட கதாநாயகியும் கதாநாயகனும் பளீரென்று அழகாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். கதாநாயகன் வயலில் ஏர் உழுதாலும் கோட்-சூட்டில் ஏர் உ ழ வேண்டும் அவர்களுக்கு. சினிமா என்பதே மாயைதானே.

கேள்வி: உங்களைத் தமிழுக்கு அறிமுகம் செய்த மணிரத்னம் பற்றி?

சந்தோஷ் சிவன்: மணிரத்னம் மிக முக்கியமான திரைப்பட ஆளுமை. அவருடன் வேலை பார்ப்பதை எப்போதுமே நான் விரும்புகிறேன். “தளபதி”க்குப் பிறகு “ரோஜா”வில் அவருடன் இணைந்து பணியாற்றினேன். அவருடன் வேலை செய்தது எனக்கு மன நிறைவைத் தந்தது.

கேள்வி: இப்போது என்ன இயக்கிக் கொண்டு இருக்கிறீர்கள்?

சந்தோஷ் சிவன்: எய்ட்ஸ் குறித்த பத்து நிமிடக் குறும்படம் ஒன்று எடுத்துக் கொண்டு வருகிறேன்.

கேள்வி: திரைப்படங்களைவிட அதிகமாக விவரணப்படங்கள்தான் (documentary) எடுத்திருக்கிறீர்கள். திரைப்படங்களுடன் ஒப்பிடும்போது விவரணப்படங்களில் கிடைக்கும் வருமானம் குறைவாகத்தானே இருக்கமுடியும்?

சந்தோஷ் சிவன்: உண்மைதான். ஆனால், விவரணப்படங்கள் எடுப்பதைதான் அதிகமும் நான் விரும்புகிறேன். விவரணப் படங்கள் எடுக்கும் போதுதான் என்னை நான் அதில் கரைத்துக் கொள்கிறேன். அவற்றில்தான் என்னால் முழுமையாக ஈடுபடவும் வெளிப்படவும் முடிகிறது. நான் உண்மையாக உணர்வதும் இவற்றில்தான். அதுபோல் குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்படும் படங்களும் எனக்கு அலாதியான ஒரு திருப்தியையும் மனநிறைவையும் தருகின்றன. அவற்றில்தான் நாம் பரிசோதனைகளை செய்து பார்க்கமுடியும். வணிகப் படங்களை வருமானத்துக்கான ஒன்றாக செய்து கொண்டே, அதிலிருந்து வரும் பணத்தில் குறைந்த முதலீட்டில் எனக்கு ஆத்மார்த்தமான திருப்தியை தரும் படங்களை செய்கிறேன். “டிம்புலுவின் கதை”, “மல்ல”, “டெரரிஸ்ட்”, “நவராஸா” இவைகள் அனைத்தும் மிகக் குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்பட்ட படங்கள்.

கேள்வி: பெரிய முதலீட்டில் தயாராகும் படங்களில் வேலை பார்த்துவிட்டு, உடனே குறைந்த முதலீடு படங்களில் வேலை பார்ப்பது ஒரு முரணாக இல்லையா?

சந்தோஷ் சிவன்: உண்மைதான். பெரிய முரண்தான். ஆனால் அந்த முரண் எனக்குப் பிடித்திருக்கிறது. அதை நான் விரும்பி அனுபவிக்கிறேன்.


ஏக்கர் நிலம் வருமானத்துடன்

வீடும் வியாபாரமும்

Metal Recycling
Auto Body Shop
Yunk Yard 2 Acres land with
House and Basesemt

Auto Body shop
House with Basement
Yunk Yard
10 acres

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு
வேலைவாய்ப்பு அழையுங்கள் - Sam Sitham (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

KENNEDY / FINCH பகுதியில் கோவில், வீதி நடைதூரத்தில்
Sep. entrance Basement வருமானத்துடன் அழகான இல்லம்


Niru BRAND ®
FOOD PRODUCTS
நிரு பிறண்ட்
வறுத்த மிளகாய்த்தூள்
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (ROTIES)
Pure Gingelly Oil
(Sesame Oil)
Kitul Treacle
CHILLI SAUCE
COW GHEE
SPICY COFFEE
CONDENSED
Sweetened Condensed Mi
300ml.
JACK
Tel: 416-750-1976 Web:www.niru.com e-mail: info@niru.com

## கடந்த இதழ் தொடர்ச்சி

(118) தேன் சுத்தமானதா? - தேன் சுத்தமானதா என்று அறிவதற்கு ஒரு தீக்குச்சியை தேனில் தோய்த்து பின் அதைத்தட்டிப்பார்த்தால் அது சுத்தமான தேனாகில் உடன் தீப்பற்றிவிடும் கலப்படமானால் தீக்குச்சி எப்படித்தட்டினாலும் பற்றாது. இன்னும் ஒரு முறையிலும் சோதிப்பது எப்படியெனின் மை ஒட்டும் தாளில் (ப்ளொட்டிங்பேப்பரில்) தேனை விட்டால் அது ஊறாது இருந்தால் சுத்தமான தேன் அது ஊறினால் கலப்புத்தேன் என்று அறிந்துகொள்ளலாம்.



(119) தேனின் மகத்துவம் - தேனும்பாலும் கலந்து பருகிவந்தால் மனிதவாழ்வு நீடிக்கும் என்று ஆயுள்வேதம் கூறுகிறது. தேனால் மஞ்சள் காமாலை, அம்மை, மலேரியா ஆகிய நோய்கள் கட்டுப்படும். காலையில் வெதுவெதுப்பான நீரில் தேனைக்கரைத்து தினம் பருகிவந்தால் எடை குறையும், உடம்பு மெலியும். கரிசலாங்கண்ணி சாறு ஒரு அவுன்ன்ஸ், தேன் அரை அவுன்ஸ் சேர்த்து காலை, மாலை குடித்தால் மஞ்சள் காமாலை குணமாகும். இரவில் ஒரு மேசைக்கரண்டி தேனை பாலில் கலந்து குடித்துவந்தால் எடைகூடும். இஞ்சிச்சாற்றுடன் தேன்கலந்து குடித்தால் தலைச்சுற்று குணமாகும். பசளிக்கீரையை அவித்து அந்த நீருடன் கொஞ்சம் தேன் கூட்டி குடித்தால் மலச்சிக்கல் குணமாகும். இஞ்சிச்சாற்றுடன் தேன் கலந்து சிறு துளிகள் நாக்கில் தடவினால் உமட்டல், வாந்தி உடன் நிற்கும். சுக்கை சுட்டுக்கரியாக்கி அந்தக்கரியுடன் சிலதுளி தேன்சேர்த்து நாக்கில் தடவினால் நெஞ்சுச்சழி குறைவதுடன் குமட்டல், வாந்தியும் குணமாகும்.

(120) தும்மலுக்கு - தூதுவளை இலையுடன் மிளகு சேர்த்து தின்று பால் குடித்தால் தும்மல் குணமாகும். கஸ்தூரிமஞ்சளை சுட்டு அதன்புகையை நுகர தும்மல் நின்றுவிடும்.

(121) தூக்கத்தின் அவசியம் - உடம்பிலுள்ள கலன்கள் அதாவது ஆங்கிலத்தில் செல்கள் (Cells) எனப்படும் நுண்ணிய ஜீவ அணுக்கள் நாம் பலவித செயற்படுகளில் ஈடுபடும்போது தேய்ந்தும் அழிந்தும் போகின்றன...., தூங்கும் போது அந்த கலன்கள் புத்துணர்ச்சி பெறுவதுடன் புதிய கலன்களும் பெருமளவில் உற்பத்தியாகி ன்றன. எனவே ஆழ்ந்த தூக்கம் மனிதனுக்கு மட்டுமன்றி சகல உயிரினத்திற்கும் அத்தயாவசியமாகிறது. ஆழ்ந்த தூக்கம் உயிரினம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு பெரிதும் உதவுகிறது.

(122) தூக்கத்திற்கு - இயற்கையான தூக்கமே சிறந்தது. தூக்க மாத்திரைகள் உடம்பிலுள்ள அத்தனை நரம்புகளையும் பெலயீனமாக்கி விடுவதுடன் பல பக்கவிளைவுகளையும் ஏற்படுத்தும். இயற்கையான தூக்கம் மனதை அமைதியாக வைத்திருந்தால் கிடைக்கும் அப்படி தூக்கம் வராவிடில் கசகசாவை பாலில் அவித்து இரவில் குடித்தால் நல்ல தூக்கம் வரும். மருதாணிப்பூக்களை இரவில் தலையணைக்கு கீழ் வைத்து தூங்கினால் நல்ல தூக்கம் வரும். படுக்குமுன் சின்ன வெங்காயத்தை மென்று தின்று ஒரு கிளாஸ் வெந்நீர் குடித்து தூங்கினாலும் நல்ல தூக்கம் வரும். தாங்கக்கூடிய சூட்டில் ஒரு அகன்ற பாத்திரத்தில் வெந்நீர் எடுத்து இரண்டு பாதங்களையும் அதற்குள் வைத்து பின் இருபாதங்களையும் நன்கு துடைத்துவிட்டு தூங்கினால் நல்ல தூக்கம் வரும்.

வெங்காயத்துடன் தயிர் கலந்து இரவில் தின்றால் நல்ல தூக்கம் வரும். தூங்குமுன் வெதுவெதுப்பான சூடான பாலில் இரண்டு தேக்கரண்டி தேன்விட்டு கலந்து குடித்துவிட்டு தூங்கினால் நல்ல தூக்கம் வரும். சர்பகந்தி இலையை துவைத்துப்பிழிந்து அதில் அரை அவுன்ஸ் எடுத்து நாலு அவுன்ஸ் பாலில் காய்ச்சி காலையில் தினம் ஐந்து நாட்கள் குடித்தால் தூக்கமின்மை குணமாகி இரவில் நல்ல தூக்கம் வரும். தூக்கம் வரவில்லை என்று அதைப்பற்றியே யோசித்தபடி இருந்தால் தூக்கம் மேலும் மேலும் கெட்டுவிடும். எனவே தூக்கம் வராவிடில் எழுந்து விருப்பமான புத்தகத்தை படிக்கவும் அல்லது தொலைக்காட்சியைப் பார்க்கவும். சுவாசப்பயிற்சி செய்யவும். இதற்கும் வராவிடில் வீட்டினுள் தொடர்ந்து நடக்கவும். தூக்கம் வந்துவிடும்.



(123) நடை மருத்துவம் - எந்த நோய்க்கு எந்த மருந்து பாவித்தாலும் உடம்பிலுள்ள தசைகள் நன்கு செயற்பட்டு அந்த தசைகளுக்கு, ஊடாக செல்லும் நாளங்களும், நாடிகளும் நுண்ணிய சிறுநாளங்களும் நன்கு செயற்பட்டு உடம்பின் பற்பல பாகங்களுக்கும் சுத்த இரத்தத்தையும், பிராணவாயுவையும் எடுத்துச்சென்று அங்கு தேங்கிய கரியமலவாயுவை அகற்றாவிடில் நோய்கள் குணப்படாது. இதற்கு உதவுவதே உடற்பயிற்சி. உடற்பயிற்சியில் மிகச்சிறந்ததே நடைப்பயிற்சி. இதனால் உடம்பிலுள்ள அனைத்து தசைகளும் அப்பியாசப்படுகிறது. நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள் கூட மென்மையாக நடந்து படிப்படியாக நோய்களைக்குணமாக்கலாம். வீட்டினுள்ளேயே நடக்கலாம். எவரும் குறைந்தது ஆறுமைல் தூரமாவது தினம் நடக்கவேண்டும்.

அதாவது குறைந்தது அரை மணிநேரம் நிற்காது நடக்கவேண்டும். வெளியில் காலநிலை சரியில்லாவிடில் வீட்டினுள்ளேயே நடக்கலாம். நோயாளிகள் வீட்டினுள்ளேயே நடக்கலாம். நடக்கும்போது வாய் மூடியிருக்கவேண்டும், மூக்கால் மூச்சுவிட வேண்டும். அமைதியாகவும், மென்மையாகவும் நடக்கலாம். உணவு அருந்தியபின் நடப்பது அன்றாட செயற்பாடாக இருந்தால் பல நோய்களை தவிர்க்கவும், குணமாக்கவும் உதவும்.


## பரம்பரை வீட்டு வைத்தியம்

டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D
Holistic Practitioner (canada)
Nutrition & fitness (Canada)
'யோக சித்தர்' வவுனியா, இலங்கை
Tele. - 416.291.3022
E.Mail-DRVPS@Hotmail.com


(124)நோய்வராமல் தடுக்க - நோய்வராது தடுப்பதற்கு மனத்தை திடமாக வைத்திருக்கவேண்டும். நோய்வருமோ என்ற பயம் மனதில் இருக்கவே கூடாது. தினம் ஏதாவது பயிற்சி, யோகாசனம் ஏதேனும் உடல் அப்பியாசம் செய்யவேண்டும். சுத்தமான காற்றோட்டமான இடத்தில் நடக்கலாம் அல்லது வீட்டுக்குள்ளேயே நிற்காது அரை மணிநேரமாவது நடக்கவேண்டும். அதிக விற்றமின் 'சீ' உள்ள எலுமிச்சம் பழச்சாறு, தோடம்பழச்சாறு ஆகியவை தினம் பருகவேண்டும். நெல்லிவற்றல் கசாயத்தை கிழமைக்கு சிலநாட்கள் குடித்துவந்தால் நோய்கள் தடுக்கப்படும். தினம் தேனை வெந்நீரில் குடித்து வந்தால் நோய் எதிர்ப்பு சக்தி கூடும். இளைஞர் தினம் ஒரு முட்டை அருந்தினால் நோய் எதிர்ப்பு சக்தி கூடும். வேப்பமரத்தை நாம் வாழும் இடத்திற்கு அருகாமையில் வளர்ப்பது நோய்களை வராது தடுக்கும். உணவுக்கட்டுப்பாடு நோய்தடுப்புக்கு பெரிதும் உதவும். அரை வயிறு உணவு, கால்வயிறு தண்ணீர் கால் வயிறு காலி யாக இருந்தால் உணவு இலகுவாக ஜீரணிக்கும். மலச்சிக்கலை தடுத்தலும் நோய்தடுக்க உதவும். வாய்கசப்பாக இருந்தால் உடம்பில் எப்பாகத்திலோ கிருமிசேர்க்கை ஏற்பட்டிருப்பதை உணர்ந்து உடன் அதை நீக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். துளசி இலையை சுத்த நீரில் ஊறவைத்து அந்த நீரை தினம் குடித்துவந்தாலும் எதுவிதமான நோயும் வராமல் தடுக்கலாம் என்கிறது ஒரு சித்தர்வாகடம். தினம் யோகாசனம் செய்க.




# AXIS AROGYA PHARMACY

**5200 FINCH AVE. EAST #111, SCARBOROUGH, M1S 4Z4**

NOW OPEN

## AXIS ஆரோக்யா பார்மசி

**Finch & Middlefield சந்திப்பில்**

Tel: 416.840.0007 Fax: 416.840.0008

**உங்கள் அருகாமையில் புதிய மருந்தகம்: Axis ஆரோக்யா பார்மசி**
தரமான சேவை தமிழில் சேவை

- நீங்கள் உபயோகிக்கும் மருந்துகள் அவற்றின் செயற்பாடுகள் பற்றியும் உங்கள் ஆரோக்கியம் சம்பந்தமான விபரங்கள் பற்றியும் தெளிவான விளக்கங்களை என்னுடன் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கலந்துரையாடி பெற்றுக்கொள்ளலாம்.
- முதியோர் மற்றும் சமூகநல உதவியில் இருப்போரிடமிருந்து $2.00 அறவிடப்படமாட்டாது.
- தங்களுக்குத் தேவையாயின் இலவச விநியோகமும் செய்து தருவோம்.
- மருந்தகத்தின் இரத்த அழுத்தம் சரிபார்க்கும் கருவியையும் இலவசமாக உபயோகிக்கலாம். (Free Blood pressure Monitoring )
- Glucometer Strips வாங்கினால் Glucometer இலவசமாக தருவோம். அத்துடன் உபயோகிக்கும் விதத்தினையும் தெளிவாக விளக்கிக் கூறுவோம்.

7 days a week

*DRAW FOR A FREE * FULLY AUTOMATIC BLOOD PRESSURE MONITOR*
குலுக்கல் முறையில் இரத்த அழுத்தம் பரிசோதிக்கும் கருவி இலவசம்*
* No purchase necessary.
Valid only at Axis Arogya Pharmacy
மேலதிக விவரங்களுக்கு அழைக்கவும்

•மருந்தக நேரம் முழுவதும் தமிழ் மருந்தாளரின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள் வெ. கார்த்திகேயன் (கார்த்திக்) மருந்தாளர் (Pharmacist/Owner)



*விரைவான சேவை! நிறைவான சேவை!!*
*தரமான சேவை!!!*

**உங்கள் ஆரோக்கியமே எங்கள் நோக்கம்**



# MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# சென்ஸார் சிக்கலில் "குப்பி"



ராஜீவ்காந்தி கொலைக்குப் பிறகு தொடங்கி, தற்கொலை செய்துகொள்வது வரைக்குமான சிவராசனின் நாட்களை அடிப்படையாகக் கொண்ட "குப்பி" திரைப்படத்துக்கு இந்திய அரசின் சென்ஸார் அனுமதி பெறுவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால் இப்படம் வெளிவருவது தள்ளிப்போகும் என்கிறார்கள். "சயனைட்" என்னும் பெயரில் கன்னடத்தில் வெளியாகி அனைவரின் பாராட்டையும் பெற்ற இப்படம், முதலில் அப்படியே தமிழில் மொழி-மாற்றம் செய்யப்படுவதாக இருந்தது. ஆனால், மொழிமாற்றப் படங்களுக்கான வரி அதிகம் என்பதால், புதிதாக நான்கு காட்சிகளை எடுத்து, புதிய தமிழ் திரைப்படமாக வெளியிட திட்டமிட்டார்கள். பிரச்சினையே இங்கேயிருந்துதான் தொடங்குகிறது என்கிறார்கள் விவரம் அறிந்தவர்கள். தமிழ் படம், அதுவும் ராஜீவ்காந்தி கொலையை மையமாகக் கொண்ட கதை என்பதால், கவனமான சென்ஸார் அதிகாரிகள், இப்போது படம் விடுதலைப்புலிகளுக்கு தரவாக உள்ளதாக கூறி அனுமதி அளிக்கத் தயங்குகிறார்கள். புதிய தமிழ் படத்தில் சேர்க்கப்பட்டுள்ள வசனங்கள் விடுதலைப்புலிகள் தரவுக் குரலாக உள்ளது என்பது குற்றசாட்டு. ஆனால், மொழிமாற்றக் கன்னடப் படம் என்னும் போர்வையில் வந்திருந்தால் இவ்வளவு சிக்கல் இல்லாமல் சுலபமாக வந்திருக்கும் என்கிறார்கள். இப்போது, சோனியா காந்திக்குத் திரைப்படத்தைக் காண்பித்து அனுமதிபெறும் முயற்சியில் இறங்கியிருக்கும் இயக்குநர் ரமேஷ் விரைவில் திட்டமிட்டபடி படம் வெளியாகும் என நம்பிக்கையுடன் சொல்கிறார்.

# அம்மாவாகிறார் ஜோதிகா!

சூர்யாவின் கையைப் பிடித்து தமிழ்நாட்டின் மருமகளான ஜோதிகா அம்மாவாகப் போகிறார். ம், ஜோதிகா கர்ப்பமாக இருக்கிறார். ஒப்புகொண்ட திரைப்படங்கள் அனைத்தையும் முடித்துக் கொடுத்துவிட்டு இப்போது முழு ஓய்வில் இருக்கும் ஜோதிகாவுக்கு கர்ப்பகால ஆலோசனைகள் வழங்குபவர் அவரது நெருங்கிய தோழியான, ரஜினியின் மகளும் தனுஷின் மனைவியுமான ஐஸ்வர்யா. கர்ப்ப காலத்தில் உடம்பைப் பேணுவதற்கான டிப்ஸ்கள், புத்தகங்கள் என அக்கறையாக ஜோதிகாவுக்கு அட்வைஸ்கள் சொல்லும் ஐஸ்வர்யாவுக்கு உணர்ச்சி வசப்பட்டு நன்றி சொன்னாராம் சிவக்குமார். சூர்யாவின் தம்பி கார்த்தி நடித்த "பருத்திவீரன்" வெளியாவது தள்ளிப்போனதால் சோர்ந்திருந்த சிவக்குமார் குடும்பம் மீண்டும் கலகலவென்று ஆகிவிட்டது என்கிறார்கள். தாத்தாவாகப்போகும் சிவக்குமாருக்கு இன்னொரு



நல்ல சந்தோசமான செய்தி, "பருத்திவீரன்" விரைவில் வெளியாக இருக்கிறது.

# ஜோதிகாவைப் பாராட்டிய கனிமொழி!

நடிகர் பிரகாஷ்ராஜ் தயாரிக்கும் "மொழி" திரைப்படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழாவுக்கு வந்திருந்தார் கவிஞர் கனிமொழி. பொதுவாக, தமிழ்நாட்டு இலக்கிய கூட்டங்கள் அல்லது கலைஞர் சம்பந்தப்பட்ட விழாகளில் மட்டுமே அதிகம் தலைகாட்டும் கனிமொழியைப் பார்த்து சினிமாகாரர்களுக்கே அன்று சின்ன



அதிர்ச்சி! "எனக்கு இதுமாதிரி சினிமா கூட்டங்களில் கலந்துகொள்வதில் விருப்பம் கிடையாது. தமிழ் சினிமாவையும், அது தமிழ் சமூகத்தைச் சீரழிக்கும் சீர்கேட்டையும் பார்த்து நொந்து போயிருப்பவர்களில் நானும் ஒருத்தி..." எனப் பேசத் தொடங்கிய கனிமொழி, தற்கால தமிழ் சினிமாவில் நம்பிக்கை தரும் நடிகராக பிரகாஷ்ராஜைக் குறிப்பிட்டார். "தமிழ் சினிமாவில் ஊனமுற்றவர்கள் எந்த வரைமுறையும் இல்லாமல் கிண்டல் செய்யப்படுகிறார்கள். இது தடுக்கப்பட வேண்டும். இல்லாத பிரச்னைக்கெல்லாம் காரணம் கண்டுபிடிக்கும் சென்ஸார் ஊனமுற்றவர்களைக் கிண்டல்செய்யும் காட்சிகளை அனுமதிப்பது எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது" என்றவர், கடைசியாக "இந்தப் படத்தில் ஜோதிகா மிக சிறப்பாக நடித்திருக்கிறார். மனைவியாகி, குழந்தைகள் பெற்று, கணவனின் தேவைகளைக் கவனித்து, வீட்டோடு முடங்கிவிட்ட பல திறமையானப் பெண்களைப் போல் இந்த சிறந்த நடிகையும் முடங்கிவிடப் போகிறாள் என நினைக்கும் போது சங்கடமாகத்தான் இருக்கிறது. ஜோதிகாவின் நடிப்பைப் பார்த்தபோது எனக்கு சூர்யா மீது கோபம்தான் வந்தது" என ஒரு போடுபோட்டார். கனிமொழி பேசி முடிக்கும்வரை, பார்வையாளர்கள் வரிசையில் சூர்யா நெளிந்து கொண்டுதான் இருந்தார்.

**பிலிம்நியூஸ் கிருஷ்ணன்**








GTA Square is a Two-Storey Indoor Mall with Underground and Surface Parking.

| Business Sold / Leased | | Available Businesses / Offices | |
|---|---|---|---|
| Advertising | Insurance Office | Airlines / Travel Agency | Locksmith |
| Audio / Video Store | Jewellery Store | Appliances | Money Transfer |
| Book Store | NewsPaper Office | Bank / Financial Institution | Optical store |
| Communications | Salon | Carpet | Plumbing |
| Convenience Store | Satellite TV | Computer | Printing |
| Fashion Shop | Taylor | Cosmetic / Beauty Salon | Shoes |
| Gift Shop | Textile Store | Drapes / Blinds | Spa / Nail Spa |
| | | Florist | Watches |
| | | Foreign Exchange | Wine Track |
| Doctors Office | | Dentist | |
| Lawyers Office | | Employment Agency | |
| Mortgages | | Physiotherapist | |
| Pharmacy | | | |
| Tai Restaurant | | Coffee Shop | |
| | | Fried Chicken Take Out | |
| | | Sweet Take Out | |

HomeLife GTA Realty Inc., Brokerage* - 416.321.6969 / 905.712.2666

# திருவண்ணாமலை - சித்தர்கள் பூமி

நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களால் ஆனது இந்த உலகம். இயற்கையாகிய பஞ்ச பூதங்களையே பண்டைத் தமிழர்கள் தெய்வமாகப் போற்றி வணங்கினர். பிற்காலத்தில் பஞ்ச பூதத் தலங்கள் மலர்ந்தன. பஞ்ச லிங்க வழிபாடுகள் நடந்தன. பஞ்ச பூதத் தலங்களில் நடுநாயகமாக விளங்குவது திருவண்ணாமலை. இந்தியாவிலுள்ள சிவத் தலங்களுள், நினைத்தாலே முக்தி வழங்கும் திருத்தலமாக உயர்ந்து நிற்கிற இந்த ஊர். சிவபெருமான் ஜோதிப் பிழம்பாய் தோன்றிய வடிவம் இங்கு மலையாக உள்ளது. "அண்ணாமலையாரைத் தொழுவோர்க்குத் தீவினைகள் அனைத்தும் நீங்கும்" என்று பக்தியோடு திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற ஸ்தலம் திருவண்ணாமலை.

திருவண்ணாமலை குறித்த வரலாற்றுப் பெருமைகள் ஒருபக்கம் இருக்க, இப்போது தமிழகத்தின் மிகப் பிரபலமான ஆன்மீக ஸ்தலமாக விளங்குவது திருவண்ணாமலைதான் என்பது இதன் தற்காலப் பெருமை. ஆதிகாலம் தொட்டு இருக்கிற ஆன்மீக வரலாறு, மலையும் தெய்வ அழகும் கூடிய இயற்கைப் பிரதேசம், இவற்றுடன் தற்காலக் கலைச்செழுமை கொண்ட ஓர் ஊராகவும் திருவண்ணாமலை இருப்பதால், இந்தியாவின் ஆன்மீக முகத்தால் ஈர்க்கப்பட்டு வரும் வெளிநாட்டு பயணிகளை திருவண்ணாமலை வசீகரிப்பதில் ஆச்சரியம் இல்லை. நூற்றுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு பயணிகள் திருவண்ணாமலையின் அமைதியும் அழகும் கண்டு, இந்தியக் குடியுரிமை பெற்று இங்கேயே தங்கிவிட்டனர். உலகின் முக்கியமான பல கலைஞர்களும் இந்த ஊருக்கு வந்து போயிருக்கிறார்கள். வரலாற்றுப் பெருமை, தற்காலச் சிறப்பு... இப்படி இரண்டு புள்ளிகள் இணையும் இடம் உலகில் வேறு எங்கும் கிடக்காது.

திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தில் ஒன்பது திருக்கோபுரங்கள், 56 திருச்சுற்றுகள், 2 பெரிய திருக்குளங்கள் உள்ளன. ஆலயத்தின் கிழக்கு வளாகப் பகுதியில் வலப்புறம் உள்ள ஆயிரங்கால் மண்டபம் காண்போரைப் பிரமிக்க வைக்கக்கூடியது. பேழகானது. இதிலுள்ளது சிவகங்கை திருக்குளம். சுமார் 217 அடி உயரத்தில் ராஜகோபுரம் உள்ளது. ஸ்ரீரங்கத்துக்கு அடுத்து தமிழகத்தில் மிக உயரமான கோபுரம் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. 6 நிலைகள், கம்பீரமான கிளிக்கோபுரமும் காண்போரைப்





**வழிப்போக்கன்**

பிரமிக்க வைக்கக்கூடியது. பாண்டியர், சோழர், பல்லவர், விஜயநகர மன்னர்களும், பிற்காலத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் இந்த ஆலயத்தின் திருப்பணியில் ஈடுபட்டுள்ளனர். உண்ணாமுலை அம்மனுக்கு இங்கே தனி ஆலயம் உள்ளது. அருணகிரியார்க்கு முருகப்பெருமான் இத்திருத்தலத்தில் உள்ள வல்லாள கோபுரம் அருகே காட்சி அருளினார் என்பது நம்பிக்கை.

## தமிழ்நாடு சுற்றுலாத்தலங்கள்-10

திருவண்ணாமலையின் உயரம் 2668 அடி. இம்மலையைச் சுற்றி வரும் பாதையில் மொத்த நீளம் 14 கி.மீ. இந்திரலிங்கம், அக்னிலிங்கம், நிருதீலிங்கம், ஈசானியலிங்கம், எமலிங்கம், வாயுலிங்கம், வருணலிங்கம், குபேரலிங்கம் என மலையின் எட்டு திசையிலும் எட்டு லிங்கங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றின் அருகிலும் அதன் பெயரிலேயே இருக்கும் தீர்த்தங்களையும் சேர்த்து, மலையைச் சுற்றி மொத்தம் 365 தீர்த்தங்களும் உள்ளன. சுற்றுப்பாதையில் துர்வாச முனிவர், கௌதம முனிவர், பிருங்கி மகிரிஷி ஆலயங்கள் உட்பட 100-க்கும் மேற்பட்ட ஆலயங்களும் சிறுகோயில்களும் உள்ளன.

ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் திருவண்ணாமலைச் சுற்றுப் பாதையில் நடந்தே வலம்வந்து, 8 லிங்கங்களையும் வழிபட்டால் புண்ணியம் கோடி, வேண்டியது கைகூடும் என்பது நம்பிக்கை. பௌர்ணமி நாட்களிலும் விஷேச பண்டிகை தினங்களிலும் பக்தர்கள் இந்த சுற்றுப்பாதை முழுக்க நடந்தே வருவார்கள். இது "கிரிவலம்" எனக் குறிப்பிடப்படுகிறது. மாதம்தோறும் பௌர்ணமி தினங்களில் மட்டும் கிட்டத்தட்ட இரண்டு லட்சம் பக்தர்கள் "கிரிவலம்" வருவதற்காக திருவண்ணாமலையில் கூடுகிறார்கள். விஷேச தினங்களில் பக்தர்கள் கூட்டம் 5 லட்சம் வரைக்கும் இருக்கும். திரளாக பக்தர்கள் செருப்பு அணியாமல், "அண்ணாமலைக்கு அரோகரா" எனச் சத்தமிட்டபடி நடந்து வருவது பார்க்கக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

பௌர்ணமி, விசேஷ தினங்கள் தவிர மற்ற நாட்களிலும் பக்தர்கள் மலையைச் சுற்றி வருவதைப் பார்க்கலாம். இம்மலையைச் சுற்றி வலம் வருபவர்களுக்கு ஒவ்வொரு தினத்துக்கும் ஒரு பலன் கிடக்கும். ஞாயிற்றுக்கிழமை - சிவபதம் கிடைக்கும், திங்கள் - உலகையே ஆளக்கூடிய வல்லமைக் கிடைக்கும், செவ்வாய் - ஏழ்மைத் தொல்லை தீரும், புதன் - கலைகளில் தேர்ச்சி கிடைக்கும், வியாழன் - ஞானிகளுக்கு ஒப்பான நிலையை அடையலாம், வெள்ளி - விஷ்ணு பதம் கிடைக்கும், சனி - நவக்கிரகங்களைச் சுற்றின பலன் கிடைக்கும்.

கார்த்திகை மாதம் கிருத்திகை நாளில் இம்மலையின் மீது தீபம் ஏற்றப்படுகிறது. "கார்த்திகை தீபம்" உமையம்மை இத்திருத்தலத்தில் நடத்திய பெருவிழா எனவும், அம்பிகைக்கு இறைவன் தீபத் திருநாளன்று ஜோதி உருவில் மலை மீது காட்சி தந்து அவருக்கு தம் இடப்பக்கம் அளித்த திருநாள் என தலபுராணம் கூறுகிறது. மலை மீது மகா தீபம் ஏற்ற சுமார் 3000 கிலோ நெய்யும் 1000 மீட்டர் காடா துணியும் பயன்படுத்துகிறார்கள். பரணிதீபமும் மலை மீது நடைபெறும் மகாதீப விழாவைக் காண ஆண்டுதோறும் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். இம்மலையிலுள்ள மூலிகைகள் காரணமாக திருவண்ணாமலையில் வீசும் காற்றில் மூலிகை மணம் கலந்திருக்கும். இம்மணம் நோய்களை தீர்க்கவல்லது என்கிறார்கள்.

திருவண்ணாமலையில் அண்ணாமலையார் கோவில், கிரிவலம் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக பார்க்கவேண்டிய முக்கியமான இடம் ரமண மகிரிஷி ஆஸ்ரமம். கருணைக் கடலாகவும், எளியவராகவும், அமைதிக் கோலத்தில் ஆரவாரமின்றி வாழ்ந்து ஆன்மீக அறிவைப் பரப்பி வந்த மகான் ரமணரின் ஆஸ்ரமம் இது. ரமணர் அமைதி தேடி திருவண்ணாமலை வந்து இங்கேயே தங்கிவிட்டார் என்கிறார்கள். 1922-ஆம் ஆண்டு ரமண முனிவரால் துவங்கப்பட்டது இந்த ஆஸ்ரமம். ரமணர், அவரது தாயார் ஆகியோர் சமாதிகள், வேதபாடசாலை, பசுமடம், நந்தனம் ஆகியவை ஆஸ்ரமத்தில் காணவேண்டியவை. 1950-ஆம் ஆண்டு ரமணர் காலமான பிறகு அவரது உறவினர்களாலும் சீடர்களாலும் இந்த ஆசிரமம் நடத்தப்பட்டு வருகிறது.

சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்கு ரயில் உள்ளது. ஆனால், ரயில் அடிக்கடி இல்லை என்பதாலும் ரயிலைவிட பேரூந்து பயண நேரம் குறைவு என்பதாலும் பேரூந்து பயணமே சிறந்தது. பேரூந்தில் செல்ல 5 மணி நேரமாகும். சென்னையிலிருந்து அரை மணிக்கு ஒருமுறை திருவண்ணாமலைக்குப் பேரூந்து புறப்படுகிறது. விசேஷ தினங்களில் சிறப்புப் பேரூந்துகள் இயக்கப்படுகிறது. திருச்சி பக்கம் இருந்து வருபவர்கள் திண்டிவனம் வந்தும், பெங்களூர் பக்கமிருந்து வருபவர்கள் வேலூர் வந்தும் திருவண்ணாமலைக்கு வருவது நல்லது. திருவண்ணாமலையில் எல்லா தரத்திலும் சிறந்த உணவு விடுதிகள் உள்ளன. அண்ணாமலையார் கோவிலில் தினமும் அன்னதானம் வழங்கப்படும். தங்க மிகச்சிறந்த லாட்ஜ்களும் திருவண்ணாமலையில் உள்ளன.


**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

1 Hour Photo Lab: 3 x 5 & 8 x 12

*Professional Photographer*-கதிர் 416-750-8118

2381 Eglinton Ave., E.,

Kennedy / Eglinton, Scarborough



**தமிழர் நிர்வாகத்தில் ஒரு**

**EMBASSY**

- *வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள்*
- *இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)*
- *இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)*

416-332-8451

Finch / Middlefield

5200 Finch Ave., Scarborough



163

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
தேமதுரத்தமிழோசை விளங்குக உலகமெல்லாம்
காலமெலாம் காதல் வாழ்க
அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்





மோலுக்குள் நேரத்தை இடையிடையே கழித்த உலகர் கோஸ்டிக்கு தொடர்ந்த கடுங்குளிரால் வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை. ஆட்டிலறி அன்னம்மாவுக்கு மருந்து வாங்குவதாகச்சொல்லி எல்லோரும் மோலுக்கு சென்றனர்.

உலகருக்கு மருதடிப்பிள்ளையார் கோவிலுக்கு புதுவருடத்திற்கு போனது போலிருந்தது. உலகரின், செக்கண்ட்புளோர் செல்லம்மாவின், ராசம்மாவின் பழைய புதிய சினேகிதர்களெல்லாம் மோலில்தான்.




மகன் பெரிய வீடு வாங்கினவர். மகனும் மகளும் வேலைக்குப்போறவை அவைக்குப்பிள்ளையளும் இல்லை எங்களுக்காண்டி வீணா கீற்றர் போடவேணும். அதுதான் அவை வேலைக்குப்போகேக்கை எங்களை (மெல்லிய குரலில் வேலைக்குப்போக முதல்) மோலடியிலை இறக்கிப்போட்டுப்போவினம் எண்டு.. பிராங்பேட் பேரம்பலத்தின் சொந்தகாரர் சொன்னபோது உலகர் கடைக்கண்ணால் பார்த்தார். அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் என வெளிநாட்டனுபவமில்லாத ஆசிரியர் எங்களுக்குப்படிப்பித்ததும் இன்று அவரும் மொன்றியலில் பிள்ளைகளோடு படும்கஸ்டத்தையும் உலகர் நினைத்துப்பார்த்தார்.

இந்த அமளிதுமளிக்குள் இளவட்டங்கள் மோலை கலக்கோ கலக்கென்று கலக்கிக்கொண்டிருந்தனர். செல்லப்பேச்சுக்கள்... குழைந்தபேச்சுக்கள்... காதல்சிட்டுக்கள் காதலர் தினத்திற்கு தமது விருப்பத்திற்குரியவருக்கு பொன்னைக்கொடுப்பதா பூவைக்கொடுப்பதா என பதறிக்கோண்டிருந்தனர்.





இந்தக்குளிரிலும் எத்தனை றோசாப்பூக்கள்?

'றோஜா மலரே ராஜகுமாரி ஆசைக்கிளியே அழகியராணி'
என்ற பாடலை பாடி விசிலடித்தபடி திரிந்த காலத்தை நினைத்துப்பார்த்தார்.
'காலமெலாம் காதல் வாழ்க' என்றபாடல் கேட்டு திரும்பினார் உலகர்.
பிறிம்லி மீனாவின் மகன் பாடலைப்பாடியபடி வந்தான்.

உலகர் வந்ததும் மோலில் அவரது குழாம் பழைய சிவராத்திரி அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டன் சிவராத்திரி என்றாலே மூன்று படம் பார்ப்பது என்று உலகர் கோஸ்டி ஊர் ஊராக உள்ள தியேட்டரெல்லாம் சென்று படம் பார்த்த ஞாபகங்கள். அன்று ஊரடங்கு சட்டம் இல்லை. ஊரடங்கினாலும் அடங்கக்கூடியவரா உலகர்?



இந்தமுறை சிவராத்திரிக்கு எல்லா கோயிலுக்கும் போக பெரிய திட்டமே போட்டுவைத்திருக்கிறார் உலகர். எல்லா கோயில்களிலும் கனேடிய இளைய தலைமுறையினர் ஆடல் பாடல் இன்னிசை நிகழ்ச்சிகள் முன்னைய காலங்களைவிட கலைநிகழ்ச்சிகளில் கலைஞர்கள் இணைந்து செயல்படுவது இளங்கலைஞர்கள் பாட இளம்கலைஞர்கள் வாத்தியங்கள் வாசிக்க தென்னிந்திய பிரபலக்கலைஞர்களே ஆச்சரியப்படுகின்றனர். ஆனால் இங்கே பலருக்கு இப்படியான சம்பவங்கள் நடப்பதே தெரியாதிருக்கின்றனர். இளைய தலைமுறையினருக்கு ஆலயங்களில் மேடையமைத்து அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் ஆலயங்களையும் நிர்வாகத்தையும் பாராட்டத்தேவையில்லை. பல்லுக்குப்பதம் பார்க்காவிட்டால் போதும்.




மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
தேமதுரத்தமிழோசை விளங்குக உலகமெல்லாம்.
காலமெலாம் காதல் வாழ்க.



OSHO
ACTIVE
MEDITATION
Daily 06.30 A.M
Osho Dynamic Meditation
All day Meditation in Weekends







905 294 6707
647 505 6746
awareness@rogers.com
Awakening Awareness.org

FOR SALE SOLD

For All Your Real Estate Needs..



Justin William
Broker
416.803.7344




- Luxury Condominium
- Low Maintenance Fee
- Tastefully Decorated
- Superb South East View
- Call **Ravi** For Details....




- 2 Bedroom Condominium
- Excellent Condition
- Laminated Floor Throughout
- Great For First Time Buyers
- Call **Justin** For Details....



Ravi Raveendran
Broker
416.817.8479




- Almost 3000 Sq Ft House
- $ 20,000 Spent on Renovation
- Huge Familyroom W/Fireplace
- Den On The Main Floor
- Call **Ravi** for details....




- Gorgeous Brand New House
- Approx 2700 Sq. Ft
- All Large Bedrooms
- All Brick With Stone Front
- Call **Ravi** For Details....




- Well Maintained Detached Hse
- Large 3 Bedrooms
- Basement Apartment
- New Laminated Flr In Bedrooms
- Call **Justin** For Details....




- Detached Brick House
- Hardwood Floor On Main Floor
- 9' Ceiling on Main Floor
- Close To School & Transit
- Call **Justin** For More Info...

HOMELIFE

HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3
Tel: 416.321.6969 Fax: 416.321.6963
This is not intend to solicit properties currently listed for sale
*Each office independently owned and operated

# சிற்பியின் உளிகள்

நாம் காணும், காலால் மிதிக்கும், கடந்து செல்லும் கற்கள் அத்தனைக்குள்ளும் சிலைகள் இருக்கின்றன என்ற உண்மையை சாதாரணமாக நாம் உணர்ந்து கொள்வதில்லை. கற்கள் கற்களாக இருக்கும் போது அதன் சிறப்பியல்பு எதுவும் வெளிப்படுத்தப்படுவதில்லை. ஏனெனில் அந்தக் கல்லுக்குள் இருக்கும் சிலை எது என்பது பற்றி எந்தக்கருத்தும் எமக்கு எழுவதில்லை. ஆனால் சிற்பி ஒருவரது கல்லின் மீதான பார்வை முற்றிலும் மாறுபாடானது. அவரது கண்ணுக்குத் தெரிவதெல்லாம் அழகான சிலைகள் தான். கற்களல்ல.

கல்லில் இருந்து வடிக்கப்படும் சிலையின் சிறப்பைப் பொறுத்தது அதற்கான மதிப்பு அளிக்கப்படுகிறது. சிலகற்கள் காட்சிப் பொருட்களாக்கப்படுவதற்காக மிருகங்கள் பறவைகளாக வடிவமைக்கப்படுகின்றன. சிலகற்கள் உத்தமர்களது உருவச்சிலைகளாகி ஊர் மக்களது மரியாதைக்கு உள்ளாகிறது. சில கற்கள் கடந்த காலச் சரித்திரங்களைச் சித்தரிப்பனவாகின்றன. சிலகற்கள் தெய்வச் சிலைகளாகி வணக்கத்திற்குரியனவாகின்றன. பலகற்கள் பயன்படாமல் காலப்போக்கில் மண்ணாகின்றன. மண்ணாகிப் போவது மட்டுமல்ல கல்லா இருந்த அடையாளத்தையும் முற்றாக இழந்துவிடுகின்றன.

ஒரு கல்லானது சிலையாவதற்கு ஒரு சிற்பியின் கற்பனாசக்தி அடிப்படையாகின்றது. அந்தக் கற்பனாசக்தியின் ஆழம், அதுபற்றிய தெளிந்த அறிவு, அந்தச் சிலையின் உருவ அமைப்பு பற்றிய உணர்வுடன் கூடிய ஒரு உறுதிப்பாடு என்பன அந்தக் கல்லுக்குள் இருக்கும் அழகிய சிலைக்கு ஒரு சிறப்பைக் கொடுக்கின்றது. இங்கு ஒரு சிற்பியின் உணர்வுகளின் உயிரோட்டம் அவர் பாவிக்கும் உளிகளால் அந்தக் கல்லின் மீது செதுக்கப்படுகின்றது. இவ்வாறு பயன்படுத்தப படும் உளிகள் அவர் எதிர்பார்க்கும் அந்தச் சிலையின் உருவ அமைப்புக்குத் தேவையான வகையில் வேறுபட்ட அளவையும், உருவ அமைப்பையும் கொண்டவையாக இருக்கும். இந்த உளிகள் அளவிலும் உருவத்திலும் வேறுபட்டவையாக இருப்பினும் உறுதி யானவையாக இருப்பது தவிர்க்கப்படமுடியாதது.

சிற்பி ஒருவரது உளிகளின் கூர்மை, உரம், உறுதிப்பாடே ஒரு கல்லின் தேவையற்ற பகுதிகளை அகற்ற உதவுகிறது. உளியும் வலிமையானது, கல்லும் வலிமையானது. இரண்டு வலிமையானவற்றுக்கிடையே இடம்பெறும் போராட்டம், அப்போராட்டத்தின் மூலம் ஏற்படும் வலி என்பன தவிர்க்கப்பட முடியாதவையாயினும் இறுதியில் உருவச்சிலை செதுக்கப்பட்டதும் அத்தனை வலிகளும் மறந்துபோய்விடும். சிலையின் சிறப்பும் அந்தச் சிறப்பில் கிடைக்கும் ஆனந்தமும் சிற்பிக்கல்ல. சிலைக்கே சென்றடைகின்றது. ஏனெனில் சித்திரம் ஒன்றை வரைந்தவரது பெயர் சித்திரத்தின் ஏதோ ஓர் இடத்தில் குறிப்பிடப்படுவது போல் சிலையை வடித்த சிற்பியின் பெயர் சிலையில் இடம்பெறுவதில்லை.



## ஓடும் நீர் உறைவதில்லை 30

இங்கு கல், சிற்பி, உளி, சிலை என்று குறிப்பிடப்படுவதெல்லாம் நமது வாழ்க்கையில் தவிர்க்கப்படமுடியாதவை மட்டுமல்ல, நம் அனைவருக்குமான தார்மீகப் பொறுப்புமாகும். ஒரு சிலையின் சிறப்பு அதன் வடிவமைப்பில், அந்தச் சிலை வெளிப்படுத்தும் கருத்துக்கள், உணர்வுகள் என்பவற்றின் அடிப்படையில் அளவிடப்படுகின்றது. சிலை ஒன்று வடிக்கப்பட்ட தும் அது கருங்கல்லாக இருந்தது என்ற உணர்வு கூட நம்மிடம் எழுவதில்லை. எனவே சிலை ஒன்றின் சிறப்புக்கு அடிப்படைகளாக அமைபவை சிற்பியின் கற்பனாசக்தியும் அவர் பயன்படுத்தும் உளிகளும் அதன் வலிமையும் ஆகும் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

இப்போது நாம் ஒவ்வொருவரும் சிற்பிகள் என்பது பலருக்குப் புரியாததாக இருக்கும். நாம் ஒவ்வொருவரும் கல்லைச் சிலையாக்க வேண்டிய தவிர்க்க முடியாத கடப்பாடு உடையவர்கள் என்பது தெரியாமல் இருக்கும். கல்லைச் சிலையாக்குவதற்கு தேவையான உரம் வாய்ந்த உளிகள் எவை என்பது தெளிவற்றதாக இருக்கும். இதனால் தான் சிலைகளைப் செதுக்க முயற்சித்து செதுக்குவதற்குப் பதிலாகப் பலர் சிதைக்கிறார்கள்.

இங்கே பெற்றோராகிய நாங்கள்தான் சிற்பிகள். குழந்தைகள் தான் கற்கள். எமது எதிர்பார்ப்பு, கற்பனாசக்திதான் குழந்தைகள் எவ்வாறு உருவாக்கப்படவேண்டும் என்ற விருப்பம். நமது மனோபாவங்கள் தான் குழந்தைகளைக் செதுக்கும் உரம் வாய்ந்த உளிகள்.

இனி வாழ்வியலுக்குள் வருவோம். ஒவ்வொரு குழந்தையும் பிறந்தவுடன் அந்தக்குழந்தையிடம் என்ன சிறப்பியல்புகள் இருக்கின்றன என்பதை வெளிப்படுத்துவதில்லை. அல்லது இவ்வாறு தான் உருவாக்கப்படவேண்டும் என்ற ஒரு கையேட்டுடன் வருவதில்லை. எனவே குழந்தை கள் மனோபாவ அடிப்படையில் எதையுமே வெளிப்படுத்த முடியாத, வெளிப்படுத்தாத கற்கள்.

பெற்றோர்கள் அதாவது சிற்பிகள், குழந்தை பிறந்தவுடன் உள்ளத்தில் உருவாகும் தமது கற்பனா சக்தியின் மூலம் அக்குழந்தை எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டும் என்ற எண்ணக்கருத்துக்களின் பிறப்பிடம். பெற்றோர்கள் சிந்தனைச் சிற்பிகள் மட்டுமல்ல மனோபாவ அடிப்படையில் கற்களாகப் பிறக்கும் குழந்தைகளை மனோபாவ உளிகளால் செதுக்கிச் சிறப்புமிக்க சிலைகளாக உருவாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பும் உடையவர்கள். குறிப்பாகக் கூறுவதாயின் சிற்பிகளாகிய பெற்றோர்கள் கற்களாகிய குழந்தைகளை மனோபாவம் (Attitude) எனும் உளிகளின் பயன்பாட்டால் மட்டுமே சிறப்பான சிலைகளாக வடிக்க முடியும். எனவே சிற்பியும், கற்களும் சிறந்த கற்பனாசக்தியும் இருப்பினும் உரம் வாய்ந்த உறுதியான உளிகள் இல்லாவிட்டால் சிலைகள் செதுக்கப்படுவதற்கு பதிலாக சிதைக்கப்பட்டு விடும்.

ஒவ்வொரு பெற்றோரும் தமது குழந்தைகளைச் சிறப்பாக வளர்த்துச் சிறந்த எதிர்காலம் ஒன்றை அவர்கள் சொந்தமாக்க வேண்டும் என்பதில் அதிகளவு ஆர்வம் கொண்டவர்களாவே இருப்பார்கள். குழந்தை களின் சிறப்பான எதிர்காலத்துக்காகத் தம்மை இயலுமானவரை அர்பணித்துக் கொள்கிறார்கள். பெற்றோர்களை தாம் பிறந்ததற்கான காரணத்தை அறிந்திராவிட்டாலும் தாம் வாழ்வதற்கான காரணத்தை அடிக்கடி நினைவு கூர்வார்கள். அதாவது பிள்ளைகளுக்காகத் தான் வாழ்கிறோம் என்பார்கள். அப்படியாயின், ஏன் ஒவ்வொரு குழந்தையும் சிறப்பான சிலைகளாக உருவாக்கப்படுவதில்லை. ஏன் பெரும்பாலான குழந்தைகள் வழிதவறிவிடுகிறார்கள்?

ஆம் வாசகர்களே!

சிற்பியும், கல்லும், சிறந்த கற்பனாசக்தியும் மட்டும் சிலையை வடிப்பதில்லை. உறுதியானதும், உரமானதும், கூர்மையானதுமான உளிகளும் பயன்படுத்தப் படுவதன் மூலமே சிலைகள் வடிக்கப்படுகின்றன. இந்த உளிகள் தான் பெற்றோர்களது சிறந்த மனோபாவங்கள். தன்னம்பிக்கை, தாழ்வு மனப்பான்மையின்மை, தளராத முயற்சி, நேர்த்தியான சிந்தனை, நேர்மை, உண்மை, சிறந்த நட்பு, தன்னைப்பற்றிய உயர்வான மதிப்பும் எண்ணமும், தன்னலமற்ற சேவை மனப்பாங்கு, வெற்றிமனோபாவம் போன்ற உரமான உறுதிவாய்ந்த உளிகளால் குழந்தைகளைச் செதுக்குங்கள். இவ்வாறு செதுக்கும் போது கல்லுக்கும் வலிக்கும். உளிக்கும் வலிக்கும். ஆனால் சிற்பியே ஆச்சரியத்தக்க வகையில் சிலை உருவாகும். அந்தச் சிறப்பான சிலையால் சிலைக்கும் சிறப்பு சிற்பிக்கும் சிறப்பு. அதுமட்டுமல்ல குழந்தைகளாகிய சிலைகள் சிற்பிகளாகிய பெற்றோர்களை மட்டுமல்ல பெற்றோர்களின் மனோபாவங்களாகிய உளிகளையும் உலகுக்கு வெளிப்படுத்திக் கொண்டிருப்பார்கள். பெற்றோர்களே! சிறந்த சிலையின் உருவாக்கத்திற்கு சிறந்த மனோபாவ உளிகளின் பயன்பாடு அவசியம் என்பதால் உரமானதும், உறுதியானதும் கூர்மையானது-மான உளிகளின் உரிமையாளர்களாகுங்கள்.


KG Master
416.725.5112







KG Master

(Over 25 years of experience)

(416) 291-2611

(416) 725-5112

**கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை**

Education = Intelligence + Character

Memory Power, Concentration
Listening Skill, Reading Skill
Goal Setting, Team Work
Performance, Presentation Skill
Time Management

Training Classes for children 7 to 16 years old

*Self-Confidence, Self-Image*
*Self-Discipline, Patience*
*Obedience, Positive Thinking*
*Winning Attitude,*
*Taking Responsibility*
*Leadership Qualities*



# ஆஸ்துமாவுக்கு ஆப்பு

மூன்று ஆண்டுகளுக்குமுன் இருபது வயதுப் பெண்ணை அழைத்து வந்து தாயார் கூறினார் “இரவெல்லாம் என்மகளுக்கு மூச்சு விடமுடியவில்லையே, படிப்பைத் தொடர முடியாது கஷ்டப்படுகிறாள், நெஞ்சில் சளி கட்டியுள்ளது. மூச்சு விடும்போது ஒருவித சத்தம் வருகிறது. ஓயாமல் இருமிக் கொண்டேயிருப்பதால் இவளுக்கு தூக்கமில்லை” என்றார். நான்கு ஆண்டுகளாகவே குளிர் காலத்திலும் இலைதளிர் காலத்திலும் இந்த கஷ்டமான நிலைக்கு அப்பெண் ஆளாகியிருக்கிறாள் என்றும் தாய் சொன்னார்.

கவலை வேண்டாம் ஆஸ்துமா நோயை சில முக்கியமான யோகாசனங்கள், பிராணாயாம முறைகள் மூலமும் குணப்படுத்த முடியுமென்று நான் கூறியவுடன் ஆறுதல் அடைந்த அவர்களுக்கு அடுத்தடுத்து இரண்டு வார இறுதிநாட்களில் சில பயிற்சிகளைச் செய்து காட்டினேன். அதன்படி அந்த யுவதியும் சில மாதங்கள் தவறாது அர்த்யோகப் பயிற்சிகளைச் செய்து வந்ததனால் இன்று பல்கலைக்கழக கல்வியை முடித்து ஒரு சிறந்த வேலையில் இருப்பதுடன் நோயிலிருந்து பூரண குணமடைந்து வாழ்வதாக அறிந்தேன்.

சிலருக்கு ஒத்துக்கொள்ளாத வீட்டுத்தூசி, சாம்பிராணிப் புகை, வாசனைப் பொருட்கள் போன்றவை இதற்குத் தூண்டுதலாக அமைகின்றன. தடிமன், சைனஸ், காதில் சீழ் வடிதல் என்பன குழந்தைகளைப் பாதிக்கும்போது சரிவரக் கவனிக்கப்படாதுவிட்டால் ஆஸ்துமாவுக்கு வழிகோலும். சிலருக்குப் பிறக்கும் போதே இந்த நோய்க்கான சூழ்நிலை தோன்றிவிடுகிறது. கருவுற்ற நிலையில் தாயின் உடல் நிலையில் ஏற்படும் சில பாதிப்புகள் கூட குழந்தைகளுக்கு ஆஸ்துமாவை வரவழைக்கலாம். உடல் நிலை பாதிக்கப்படும்போது ஆஸ்துமா வருவதுபோல் மனநிலை பாதிக்கும் போது கூட சிலருக்கு அது வரலாம். இந்நோய் வருவதற்குப் பருவநிலை மாற்றமும் தவறான உணவுமுறையும் காரணமாகலாம்.

குழந்தைகளைத் தாக்கும் ஆஸ்துமா (Asthma) அவர்கள் பருவ வயதை அடைந்ததும் அநேகமாக மாறிவிடுகிறது.

இளம் வயதினருக்கு இந்நோயின் தாக்கம் ஏற்படும்போது மூக்கின் வழியாக பலதரப்பட்ட மருந்துகளை உறிஞ்சுவதன்மூலம் உடனடியான நிவாரணம் கிடைக்கலாம். ஆனால் இவைகள் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு



நல்லதல்ல. இவற்றின் பின்விளைவுகள் மிகவும் ஆபத்தானவை. மிகவும் சக்திமிக்க மருந்துவகைகளை உடலுள் செலுத்தி ஆரோக்கியத்தை கெடுக்க வேண்டாம். எத்தகைய மருந்தினை உபயோகித்தாலும் நோயின் தீவிரத் தன்மையை குறைக்க முடியுமேதவிர அதிலிருந்து விடுபடமுடியாது.

எனவே கண்கூடாகத் தெரிந்த உண்மைகளை நோக்கும் போது யோகாசனப் பயிற்சிகளின் மூலமாக ஆஸ்துமா நோய்க்கு பூரணமாக முடிவு கட்டலாம் என்பது உறுதி. இந்த நோயாளிகளுக்கு முக்கியமாக ஒட்டகாசனம் (Camel Pose), விபரீதகரணி, மகாமுத்ரா போன்ற ஆசனங்களை பயிற்சிகொடுக்க வேண்டும். இவற்றுள் Camel Pose என்னும் ஒட்டக ஆசனத்தை தினமும் காலை, மாலை சில நிமிடங்கள் பயிற்சி செய்து வரும்போது விரைவான முன்னேற்றத்தைக் காணமுடியும்.

## ஆஸ்துமா தாக்கத்திற்கு உடனடி நிவாரணம்

முதலை ஆசனம் (Crocodile Pose)

வெளி இடங்களிலோ உதாரணமாக பாடசாலைகளிலோ, வேலைத்தலங்களிலோ அல்லது பிரயாணங்களின்போதோ ஆஸ்துமாவின் (Asthma) கடுமையான தொல்லைகளுக்கு ஆளாகும் போது குப்புறப்படுத்த படி செய்யும் ஆசனங்களில் ஒன்றான முதலை ஆசனம் இரண்டு முதல் ஐந்து நிமிடங்கள் தொடர்ந்து செய்யும்போது உடனடியாக நிவாரணம் கிடைக்கிறது. இதனை ஒரு யோகாசன ஆசிரியரின் உதவியுடன் தான் பழக வேண்டும். இது மிகவும் இலகுவாக அனைவராலும் செய்யக்கூடிய ஆசனம். இதன் போது நுரையீரலானது (Lungs) ஆழமாக விரிந்து சுருங்கும் நிலை ஏற்படுகிறது.

## பிராணாயாமப் பயிற்சியும் ஆஸ்துமாவும்

Breathing Exercise of Asthma

பிராணாயாமத்தில் கபாலபதி என்னும் (Purping Technique) மூச்சுப்பயிற்சி முறை உகந்தது. இந்த பயிற்சியின்போது சுவாசப்பைகளிலிருக்கும் கரியமில வாயு முற்றாக வெளியேறி பிராணவாயு உட் செல்கிறது. இதுமிக வேகமாக நடைபெறுவதால் சளியை வெளியில் தள்ளுவதுடன் சைனஸ் தொல்லைகளிலிருந்து விடுபட வழிபிறக்கிறது.

இது பற்றிய விளக்கம் தேவையென்றால் “விளம்பரம்” பத்திரிகை மூலமாக என்னுடம் தொடர்பு கொள்ளவும்.






# மத்தளம்

17ஆம் பக்கத் தொடர்ச்சி

இளைஞர்கள் அனைவரும் ஒத்துழைத்துச் சமையல்வேலையில் ஈடுபட்டுச் சமையல் முடியும் வேளையில் அவ்விடத்திற்கு விடுதலைப்போராளிக்குழுவினர் சிலர் வந்தனர். வந்தவர்கள் தமக்கும் உணவு வழங்கும் படி கேட்டனர். இடம்பெயர்ந்த மக்களுக்கே அங்கு சமைக்கப்படும் உணவி கால்வயிறு, அரைவயிறுக்கே போதுமானதாக இருந்த வேளைலும் விடுதலைப் போராளிகள் தங்கள் உயிரைக்கொடுத்து மக்களுக்காகப் போராடுவதால் “குழந்தைகளுக்கும், வயோதிபர்களுக்கும் உணவைக் கொடுத்து விட்டு, ஒரு பகுதியை அந்தத் தம்பிமாருக்கும் கொடுங்கள் என்று ஒரு சிலர் கூறினர்.

இதன் பின்னர் போராளிக்குழுவினர் கொஞ்ச உணவைப் பெற்றுச் செல்ல மீதி உணவை அனைவரும் பகிர்ந்துண்டு அரைகுறை பசிபோக்கினர்.

மறுநாள் காலை பதினொரு மணியளவில் அன்றைய சமையல் வேலைகளில் மக்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் ஒரு குழுவினரும் இராணுவத்தினரும் அவ்விடம் வந்தனர். வந்தவர்கள் வந்த வேகத்தில் சிலரைத் தாக்கினார்கள். “நீங்கள் எல்லாரும் புலிகளாடா? புலிகளுக்கா சாப்பாடு சமைச்சுக் கொடுக்கின்றீர்கள்?” என்றி கத்திய வண்ணம் அங்கிருந்த பெரியவர், சிறியவர், ஆண், பெண் எனப்பாராது அடித்து உதைத்தனர். சமையல் பாத்திரங்கள், பண்டங்களையும் காலால் உதைத்துதள்ளி நாசம் செய்து விட்டுச் சில இளைஞர்களையும் தம்முடன் அழைத்துக் கொண்டு அவ்விடமிருந்து தமது வாகனங்களில் ஏறி விரைந்து மறைந்தனர்.

மக்கள் மத்தளமா அடிபட்டு மாய்ந்து கொண்டிருந்தனர். இன்னும் இன்னும் மாய்கின்றனர்.




# மத்தளம்

## குறுபடத்திற்கோர் சம்பவம்

## எஸ் சந்திரபோஸ்

ஏ 9 வீதி கொடிகாமம் சந்தியிலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் பாதையில் அமைந்திருக்கும் சிறு கிராமம் வரணி. உள்நாட்டு யுத்தம் காரணமாக வளமும் வனப்பும் இழந்து காணப்படுகின்றது. மக்கள் முகங்களில் சொல்ல முடியாச் சோகம் எல்லோரிடமும் அச்சம் பரபரப்பு ஒருவகை ஏக்கம். அக்கிராமத்தில் சிறு இராணுவமுகாம், இராணுவத்தின் முன்னரங்கு என்பன காணப்படுவதுடன் அறிவிக்கப்படாத ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பது போன்றதொரு நிலை.

10.08.2006 காலை வேளை அன்றும் வழமைபோல் வரணிக்கிராமம் விழித்துக் கொள்கிறது. காலை இளம் காற்று மா, பலா, தென்னை, பனை போன்ற வான் பயிர்களை வருடிச் செல்கின்றது. கிராமத்து மக்கள் தத்தம் அத்தியாவசிய கடமைகளின் பொருட்டு நடமாடிக்கொண்டிருக்கின்றனர். பாடசாலை செல்லும் சிறுவர்கள், சந்தைக்குச் செல்வோர், மற்றும் பல்வேறு வேலைகளுக்காக போவோர் வருவோர் என மக்கள் நடமாட்டம் மிக ஆரவாரமாக இன்றி அமைதியாகவே நடைபெற்றுக் கொண்டிருந்தன.

